விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 02 புதன்கிழமை (18.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

மாநகர சபை
யாழ்ப்பாணம்.




## பசில் எம்.பியுடன் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள் காணாமல் போவது குறித்து ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் எம்.பியுமான பசில் ராஜபக்ஷவிடம் எடுத்துக் கூறியதாக தமிழ்த் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக பசில் ராஜபக்ஷவை சந்தித்து முழுவிபரங்களையும் தெரிவித்ததாகவும் (14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அனுமதி இல்லாமல் இன்று முதல் பயணம் செய்யலாம்

### ஆளுநர்–அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யும் யாழ். மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்டவர்கள் இன்று முதல் பாதுகாப்பு அனுமதியின்றி தமது தேசிய அடையாள அட்டையின் 3 நிழற் பிரதிநிதிகளைச் சமர்ப்பித்து நேரடியாக பயணத்தை மேற்கொள்ள முடியும் என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அறிவித்துள்ளதாக அரச அதிபர் க.கணேஷ் நேற்றிரவு தெரிவித்தார். யாழ். மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வோர் இதுவரைகாலமும் பாதுகாப்பு அனுமதி (13ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. அதிகாரி ஜோன் கோம்ஸ் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

## மீள்குடியமர்ந்தவர்களின் நிலைமை குறித்து யாழ். அரச அதிபருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் கோம்ஸ் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அவர் மீள்குடியமர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பில் யாழ். அரச அதிபருடன் கலந்துரையாடியதுடன் நேரில் சென்றும் ஆய்வு செய்தார். (14ஆம் பக்கம் பார்க்க)



## நாடாளுமன்ற அமர்வுக்கான நாட்கள் திடீரென குறைப்பு

### எதிர்த்து ஐ.தே.க. வெளிநடப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுக்கான நாட்களை குறைத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முற்பகல் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

சுமார் 15 நிமிடங்களின் பின்னர் மீண்டும் சபைக்குள் பிரவேசித்த ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிறை வேற்று அதிகாரத்தை பயன்படுத்தி நாடா ளுமன்றத்தை கட்டுப்படுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முற்படுவதாக குற்றம் சாட்டினார்கள்.

ஐக்கியதேசிய கட்சியின் பிரதம கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா நாடாளுமன்ற அமர்வுகள் வாரத்திற்கு ஒரு தடவை மட்டும் கூட்டப்படும் என சபைக்கு அறிவிக்கப்பட்டமை அரசியல் யாப்புக்கு முரணானது என்று சுட்டிக்காட்டினார். (14ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் அறிவித்தபின் நாடாளுமன்றத்தை கலைக்க திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை அறிவிப்பது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தியிருப்ப தாகவும் இதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா என ஆராய்ந்து பார்க்குமாறு அவர் சட்டமா அதிபருக்கு அறிவித்திருப்பதாகவும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் ஊடாக எதிர்க் கட்சிகள் ஐக்கியத்தை சீர்குலைக்கவும் ஜனாதிபதித் தேர்தலுக்காக அரசாங்கத்தின் அமைச்சர்களின் உச்ச ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்வதுமே ஜனாதிபதியின் நோக்கமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிடப்பட்ட பின்னர் பொது வேட்பாளரை களமிறக்க (14ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு

(திருகோணமலை)

யோகபுரம் மகா வித்தியாலயம், வவுனிக்குளம் படிவம் நான்கு ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது யாழ். மாவட்டத்தில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களை தமது பாடசாலைகளுக்கு கடமைக்கு திரும்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா விடுத்துள்ளார். அத்துடன் மேற்குறித்த இரண்டுபாடசாலைகளில் (14ஆம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரம் சிறையில் கைதிகளிடையே மோதல்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்று அதிகாலை கைதிகளிடையே ஏற்பட்ட மோதலில் 4 பேர் காயமடைந்தனர் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை சிறைச்சாலை அதிகாரிகள் கைதிகளை கணக்கெடுத்துக் கொண்டிருந்த போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக உதவிச் சிறைச்சாலை ஆணையாளர் கெனத் பெர்ணாண்டோ தெரிவித்தார்.

இதனால் காயமடைந்த 4 கைதிகள் சிறைச்சாலை வைத்திய சாலையில் அனு மதிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். காயமடைந்த கைதிகள் தமிழர்களா? சிங்களவர்களா? என்று அவர் ஏதும் (13ஆம் பக்கம் பார்க்க)

## சிறைக்கைதிகள் தாக்கப்பட்டதை கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலை அதிகாரியினாலும், சிங்கள கைதிகளினாலும் தாக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்தும், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கொட்டும் மழையிலும் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் மேல் மாகாணசபை உறுப்பினர் பிரபாகணேசன், செயலாளர் குமரகுருபரன், சிறிலங்கா சுதந்திர கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர, (13ஆம் பக்கம் பார்க்க)

நம்பவே முடியல்ல!..
ஆனால் உண்மை!..

1.8 Dual core Celeron
Asrock G31 M-S
250 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
15.6'' Topview
Keyboard
Mouse
Speaker
38500/=

2.93 Core 2 Duo
Asrock G31 M-S
500 GB
2GB Memory
DVD Writer
ATX Casing
19'' Samsung
Keyboard
Mouse
Speaker
58150/=

2.5 Dual core
Asrock G31 M-S
250 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
15.6'' Topview
Keyboard
Mouse
Speaker
41900/=

UPS 650V
→ DCP - 4200/=
→ East - 4100/=
→ PowerIII - 4150/=
→ Power Tree - 4900/=

Monitor
→15.6" Topview - 12100/=
→16" View Sonic - 14500/=
→17" Dell - 15500/=
→19" Samsung - 16800/=

Woofer
→2.1 Creative - 2900/=
→2.1 Logitech - 3450/=
→2.1 Spectra 2000 - 2750/=
→5.1 Spectra 2000 - 5750/=
→5.1 Creative - 7900/=

Printer
→Hp DeskJect 1560 - 4650/=
→Epson T 10 -

Router
→D-Link ADSL 4200-10750/=
→D-Link Dialog Broad Band 6250 - 7500/=

Head Phone 450 - 900/=
Key Board 400- 2150/=
Mouse 400 - 650/=
Modem PCI - 800/=
Web Camera 8.0 - 3600/=
Speaker 400 - 900/=
PCI TV Capture Card - 2750/=
USB HUB 250 - 1200/=
USB Cable 200 - 800/=
Net Work Cable
Epson Ribbion Lq 300+
Recovery Card
Card Reader
USB Light
Lap top Speaker

2.6 Dual core
Asrock G31 M-S
320 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
15.6'' Topview
Keyboard
Mouse
Speaker
42950/=

2.5 Dual core
Asus P5KPL -AM SE
320 GB
1GB Memory
DVD Writer
ATX Casing
16'' View Sonic
Keyboard
Mouse
Speaker
46200/=

2.5 Dual core
Asrock G31 M-S
320 GB
2GB Memory
DVD Writer
ATX Casing
17'' Dell
Keyboard
Mouse
Speaker
48400/=

3 வருட உத்தரவாதம்!

2.6 Dual core
Asus P5KPL-AM SE
500 GB
2GB Memory
DVD Writer
ATX Casing
19'' Samsung
Keyboard
Mouse
Speaker
52050/=

விற்பனைக்கு பிந்திய சேவைகள்

2.93 Core 2 Duo
Asrock G31 M-S
320 GB
2GB Memory
DVD Writer
ATX Casing
15.6'' Topview
Keyboard
Mouse
Speaker
49950/=

நம்பிக்கை உத்தரவாதம் நிரந்தரம்

PCST PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna. Tel :- 021 222 1101
(C-3736)
521/1 Navalar Road, Jaffna. Tel :- 021 222 9644




யாழ்/உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் விஜயம் செய்த பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தம், கல் லூரியின் ஆசிரியர்கள் மலர் மாலை அணிவித்து ஆலாத்தி எடுத்து வரவேற்கப்படுவதையும் மேடையில் றோயல் கல்லூ ரியின் பிரதி அதிபர், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கல்வி அமைச்சின் ஆலோசகர் எம்.தணி காசலம்பிள்ளை, பிரதிக் கல்வி அமைச்சர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மாரப்பன ஆகியோரும் இறைவணக்கம் செய்வ தையும் படங்களில் காணலாம்.

# இராமாவில் முகாமிலுள்ள 248 பேர் இன்று சொந்த இடங்களுக்கு செல்வர்

(யாழ்ப்பாணம்)

இராமாவில் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள வெளிமாவட் டங்களைச் சேர்ந்த 248 பேர் இன்று அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேரும் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 8 குடும் பங்களைச் சேர்ந்த 24 பேரும் மட்டக்க ளப்பு 20 குடும்பங்களைச் சேர்ந்த 58 பேரும் திருகோணமலை 39 குடும்பங் களைச் சேர்ந்த 106 பேர் ஆகியோர் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இவர்களை அனுப்பிவைக்கப்படும் நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு நடை பெறவுள்ளது. (ச)

## செயலமர்வு

வட மாகாணத்தில் மதர் சிறிலங்கா செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு வலயக் கல்விப் பணிப்பாளர் கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக் கான செயலமர்வு மதர்சிறிலங்கா மன் றத்தினால் எதிர்வரும் 25 ஆம்திகதி வவு னியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள கணனி மூலவள நிலையத்தில் காலை 9.30மணிக்குநடத்தப்படவுள்ளது. (ஓ-7.14)


## விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணனி வன்பொருள் பயிற்சி நெறிக்கு யாழ்ப் பாணம் பயிற்சி நிலையத்திற்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

விண்ணப்பதாரி க.பொ.த. (சா/த) வரை கல்வி கற்றதுடன் விண்ணப்ப முடிபுத் திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி,தேசிய அடை யாள அட்டை இலக்கம், கல்வித் தகை மைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக் கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல.7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு தேசிய பயிலுநர் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகா மையாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# பேராசிரியர் கைலாசபதியின் நினைவுப் பேருரை நிகழ்வு



யாழ்.பல்கலைக்கழகத்தின் மூதவர்களில் ஒருவரும் யாழ். வளாகத்தின் முதல் தலைவருமான பேராசிரியர் க.கைலாசபதியின் நினைவுப் பேருரை இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்வில் பாண்டிச்சேரி மொழியியல் பண் பாட்டு நிறுவனத்தின் மானிடவியல் பேராசிரியர் முனைவர் பக்தவத் சல பாரதி, பாணர்மரபு-பழங்குடிபாணர், வீரயுகப்பாணர், பிற்காலப் பாணர், திராவிடர் இன வரைவியல் நோக்கு என்னும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

தமிழ் வீரயுகப்பாடல்கள் பற்றி உலகப் புகழ்பெற்ற ஆய்வினை மேற்கொண்ட பேராசிரியர் கைலாசபதியை பொருத்தமான முறையில் நினைவு கூருவது இந்நிகழ்வில் குறிப்பிடத்தக்க விடயமாகும். (ச)

## செல்வச்சந்நிதியில் திருக்கல்யாண நிகழ்வு

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் முருகப் பெருமான் வள்ளி அம்மை திருக்கல்யாண நிகழ்வு நாளை இடம்பெற வுள்ளது.

காலை விசேட அபிஷே கப் பூஜை நடைபெற்று வள் ளியம்மை திருமணப் புரா ணப் படிப்பு ஆரம்பமாகி பிற் பகல் 4.30 மணியளவில் திருக்கல்யாணத் திருவிழா நிகழ்வும் கந்தபுராண படன பூர்த்தியுடன் நிறைவு பெறும்.(ச)


முட்டை விற்பனைக்கு

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
077 9204157
071 2786642
(3938)



தவறவிடப்பட்டது

மாதர்சங்க ஒழுங்கை,சித்தன்கேணியை முகவரியாகக் கொண்ட B.S.அன்ரனிதாஸ் ஆகிய எனது அலுவலகக் கணக்கு கொப்பி ஒன்றும்,மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் என்பனவும் தாவடிக்கும் மானிப் பாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கொடுத்து உதவவும்.தகுந்த சன்மானம் வழங் கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இலக்கம்:-
077 6283947
(3942)


## கணக்குகளை ஆரம்பிப்போருக்கு பரிசு

(யாழ்ப்பாணம்)

அரியாலை உப தபால் கந்தோரில் தேசிய சேமிப்பு வங்கியில் இன்று புதன்கிழமை கணக் குகளை ஆரம்பிப்பவர்களுக்கு பரிசில்கள் வழங் கப்படவுள்ளன.

மணிக்கூடு, புத்தகப் பைகள், உண்டியல்கள், பேனா என்பன இப் பரிசுகளுக்குள் உள்ளடங்கு கின்றன என்று உப தபாலதிபர் தெரிவித்துள் ளார். (ச-133)




# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை

# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் – 2010

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் , சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குனர்கள்/ ஒப்பந்தக்காரர்கள் , அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பனவற்றிடமிருந்து 2010 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை கீழ் வரும் மாதிரி விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்து ஒவ்வொரு இலக்கதிற்குமான வழங்கல்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ரூபா 100/– ஐ எமது அலுவலகத்தில் அல்லது பணிப்பாளர், போதனா வைத்தியசாலை , யாழ்ப்பாணம் என்ற பெயரில் இலங்கை வங்கி மேற்தரக்கிளையில் உள்ள நடைமுறைக்கணக்கு இலக்கம் 7040260 இற்கு செலுத்தி வங்கி பற்றுச்சிட்டை (Credit Slip) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பப்படிவத்துடன் இணைத்து தபால் உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள் / சேவைகள் பதிவு செய்தல் – 2010 "எனக் குறிக்கப்பட்டு பணிப்பாளர் , போதனாவைத்தியசாலை , யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 24.12.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

**தொகுதிகள் :–**

தொகுதி "A" – பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" – பொருட்கள் வழங்குதல் (மருத்துவம்)
தொகுதி "C" – சேவைகள்
தொகுதி "D" – வாகனத் திருத்தமும் சேவிஸ் செய்தலும்

| தொகுதி இல | பொருட்கள் விபரம் (பொது) |
|---|---|
| A- 01 | காகிதாதிகள் ,எழுதுபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A- 02 | தளபாடங்களும்,அலுவலக உபகரணங்களும் (மரம்/ உருக்கு) |
| A- 03 | கணனிகள் ,கனணியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் ,றோனியோ இயந்திரம் ,தொலை நகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள் ,றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A- 04 | இயந்திரக் கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A- 05 | யன்னல் திரைச்சீலைகள்,சீருடைகள் மற்றும் துணி வகைகள் |
| A- 06 | குளியலறைப் பொருத்திகள் , மாபிள்க்கல் வகைகள் |
| A- 07 | சகல விதமான அலுமினிய வீட்டுப்பாவனைப் பொருட்கள் |
| A- 08 | தும்பு மெத்தை,இறப்பர் மெத்தை , மெக்கின்றோஸ்,எலாஸ்ரிக்,நைலோன் நூல் |
| A- 09 | கட்டட, இரும்புப் பொருட்கள், பெயின்ட், வானிஸ் மற்றும் சகல ஹட்வெயர் பொருட்கள் மணல்,கல், சீராந்தி,சலாகை உட்பட |
| A- 10 | மின்சாரப் பொருட்கள்,அதன் உதிரிப்பாகங்கள் ,மின் மோட்டர்கள்,மின்சார வல்புகள்,மின் விசிறிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்களும் |
| A- 11 | புற்பாய்,தும்புத்தடி,விளக்குமாறு,கால்துடைப்பம்,மொப்பர் மற்றும் ஏனையவை |
| A- 12 | ஊத்தைச் சோடா,அழுக்கு நீக்கும் பவுடர்கள்,விம்,ஹார்ப்பிக்,சேவிங் பிளேற் மற்றும் ஏனையவை |
| A- 13 | மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் ரயர், ரியூப் மற்றும் பற்றறிகள் |
| A- 14 | நீர் குழாய் பைப்புப்புகள், பைப்பிணைப்புகள், மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள் |
| A- 15 | தோல் உற்பத்திப் பொருட்கள் – சப்பாத்துக்கள்,சிலிப்பர்கள் |
| A- 16 | குளிர்சாதனப்பெட்டிகள் ,காற்றுக்குளிராக்கிகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களும் |
| A- 17 | சகல வகையான ரெக்சீன் துணிகள் ,பொலித்தீன் |
| A- 18 | இறப்பர் முத்திரை வகைகள் |
| A- 19 | பால்மா வகைகள் மற்றும் ஊட்டச்சத்து பானங்கள். |

| தொகுதி இல | பொருட்கள் விபரம் (மருத்துவம்) |
|---|---|
| B- 01 | Dressings |
| B- 02 | Surgical Consumables |
| B- 03 | Surgical Instruments |
| B- 04 | Surgical Equipments |
| B- 05 | Dental Consumables |

| தொகுதி இல | சேவைகள் விபரம் |
|---|---|
| C- 01 | உருக்கு ,மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல் |
| C- 02 | மின்உபகரணங்கள்திருத்தம்செய்தல்(காற்றுக்குளிராக்கி,குளிர் சாதனப்பெட்டி,றோனியோ இயந்திரம் , கணனியும் அதனோடு இணைந்த உபகரணங்களும் ஏனையவையும்) |
| C- 03 | மின்மோட்டர்கள்,நீர் இறைக்கும் இயந்திரங்கள் ,மின் விசிறிகள்,ஜெனரேட்டர்கள் திருத்தலும் மீள முறுக்குதலும் (Rewinding) |
| C- 04 | பதிப்பக வேலை (Printing)- சகல வித படிவங்கள் , ஏனையவை |
| C- 05 | வைத்தியசாலை உபகரணங்கள் ( சத்திரசிகிச்சை உபகரணம், எக்ஸ்ரே இயந்திரம் , ஏனைய வைத்திய உபகரணங்கள்) திருத்தம் செய்தல். |
| C- 06 | சகல விதமான வைத்திய சாலை பொறித்தொகுதிகள் திருத்தம் , பராமரிப்பு, சேவிஸ் செய்தல் மற்றும் ஏனையவை |
| C- 07 | வைத்தியசாலைக் கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரத் திருத்தமும் பராமரிப்பும் , கழிவு நீர் பைப் அடைப்பு நீக்கி திருத்தம் செய்தல் |
| C - 08 | வைத்தியசாலை அலுவலகர்களுக்கு பிளாஸ்ரிக் அடையாள அட்டை வழங்குதல் |
| C - 09 | கட்டடத் திருத்த வேலை |

| தொகுதி இல | சேவைகள் விபரம் (வாகனத்திருத்தமும் சேவிஸ் செய்தலும் |
|---|---|
| D- 01 | சகல விதமான வாகனத் திருத்தம் , மின்சார வேலை, வாகன உட்பக்கம், சீற் என்பனவற்றிற்கு குசன் வேலை |
| D- 02 | சகல விதமான வாகனமும் சுத்திகரிப்பு (Service) |

*நிபந்தனைகள்:–*

01.வழங்கல்கள் / சேவைகள் 2010 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
02.திருப்தி கரமற்ற வழங்கல்கள் / சேவைகளை நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
03.பணிப்பாளர் வெளி மூலங்களில் இருந்தும் கேள்வி கோரும் உரிமையைக் கொண்டுள்ளார்.
04.பதிவுக்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை பணிப்பாளருக்கு உண்டு.
05.மேலதிக விபரங்கள் பெற விரும்பின் பணிப்பாளர் , போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் தொலைபேசி இலக்கம் 021 222 2261 உடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி ஈ.தேவநேசன் ,**
**பணிப்பாளர், போதனாவைத்தியசாலை , யாழ்ப்பாணம்.**

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வழங்குநர்களையும் ஒப்பந்தக் காரர்களையும் பதிவு செய்தல் –2010**
**போதனாவைத்தியசாலை யாழ்ப்பாணம்**

01.நிறுவனத்தின் பெயர் :– 02.நிறுவனத்தின் முகவரி :– 03.தொலைபேசி இலக்கம்:–
04 .தொலைநகல் இலக்கம் :– 05.வியாபார பதிவு இலக்கம்:– 06.வியாபாரத்தின் தன்மை :–
07.வற்பதிவு இலக்கம் :– 08.மின் அஞ்சல் முகவரி:–

| தொகுதி இலக்கம் | வழங்கல்/சேவை விபரம் |
|---|---|
| | |

என்னால் / எங்களால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் சரியானது எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் குறிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் / சேவைகள் வழங்ககுவதற்கு உறுதியளிக்கின்றேன் /உறுதியளிக்கின்றோம் .ரூபா 100/– க்குரிய வங்கி வைப்புப் பற்றுசிட்டு இத்துடன் இணைத்துள்ளேன் / இணைந்துள்ளோம்.

விண்ணப்பத்தாரியின் ஒப்பம் :–..........................................
விண்ணப்பத்தாரியின் பெயர்: –.......................................... (சி/3734) ...................... திகதி

## புற்றுநோயாளர் அதிகரிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பகுதியில் வாய்ப் புற்றுநோயாளர்கள் அதிகரித்துள்ளதாக தெரியவருகின்றது. இதுவரை இந்நோய் காரணமாக அருமைநாதன் மேற்கு வீதியில் ஒருவரும், கல்லொழுங்கையில் திருமதி செல்லம்மா என்பவரும் அதே வீதியில் திருமதி ராணி என்பவரும் மரணமாகியுள்ளனர்.

ஏனையோர் யாழ் போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளர் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.(ஓ–72)

## திருக்கார்த்திகை தீபத் திருவிழா

(ஊர்காவற்றுறை)

எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதியும், இரண்டாம் திகதியும் திருக்கார்த்திகைத் தீபத் திருவிழா (விளக்கீடு) இந்து சமய மக்களால் ஆலயங்களிலும், இல்லங்களிலும் கொண்டாடப்படவுள்ளன.

முதலாம் திகதி குமாராலய தீபமும், சர்வாலய தீபமும், இரண்டாம் நாள் விஸ்ணுவாலய தீபமும் அனுஷ்டிக்கப்படவுள்ளன. (ஓ–72)

## சிரமதானப் பணி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை மக்களால் புனித அந்தோனியார் சேமக்காலை, புனித சூசையப்பர் ஆலய மைதானம் ஆகியன சிரமதானப் பணிமூலம் புனரமைக்கப்பட்டுள்ளது. (ஓ–72)

## கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் எவ்.ரி. எடிசன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் த.பிறேமகாந்தன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக இயேசு சபை அகதிப் பணியின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அருட்பணி தே. எட்வின், கௌரவ விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பிரதி அமைப்பாளரும் தென்மராட்சி பிரதேச பொறுப்பாளர் சூ.அ.சாள்ஸ் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் சிறுவர் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் அ.அஜந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் மிருசுவில் நலன் புரி நிலையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு பிற இடங்களில் வசிக்கும் தற்காலிக இணைப்பில் குறித்த பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (ஓ–4)

## இலவச தொழிற் பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம் JTI நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு கீழ்வரும் தொழிற் பயிற்சி வகுப்புக்களை இலவசமாக நடத்தப்படவுள்ளது.

இதில் றேடியோ, ரெலிவிசன் , வீடியோ டெக் திருத்துதல், 10 மாதங்களும், மொபையில் போன் திருத்துதல் 3 மாதங்களும் ஏயார் கொண்டிசன், எலக்ரிக்கல் வயறிங் , மோட்டார் சைக்கிள் மெக்கானிக் 6 மாதங்களும், கணனி வன்பொருள் டிப்ளோமா 3மாதங்களும் நடத்தப்பட உள்ளன.

இத் தொழிற் பயிற்சி வகுப்புகள் எதிர் வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. மேலதிக தகவல்களை யாழ்ப்பாணம் தொழில்நுட்ப நிறுவனம் , இல 45 ,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் எனும் இடத்திலும் நியூ ஏசியன் சென்ரர் , 56/15 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (சம்பத் வங்கிய ருகாமை ) எனும் இடங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும் . (ஓ–9–17)

## புற்று நோயாளர்களுக்கான அன்பளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் நடத்தும் புற்று நோயாளர்களுக்கான அன்பளிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 11 மணிக்கு தெல்லிப்பளை பிரதேச செயலர் காரியாலய மண்டபத்தில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளன தலைவர் க. புஸ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக புற்று நோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி ந. ஜெயக்குமார், தெல்லிப்பளை பிரதேச செயலர் எஸ். முரளிதரன், தெல்லிப்பளை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச. கயிலாசநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் தெல்லிப்பளை பிரதேச செயலரினால் முன்வைக்கப்பட்ட புற்று நோயாளர்களுக்கான அன்பளிப்புக்கள் வழங்கப்படவுள்ளதால் இதற்கு உதவியோர்களையும் தெல்லிப்பளை கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களையும் தவறாத கலந்து கொள்ளுமாறு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளன செயலாளர் செ. குமாரசிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-4)

## யாழ்.செய்திகள்

## செயலமர்வு

(அல்வாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வலய கல்வி பணிப்பாளர்கள் மற்றும் கோட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வவுனியா கல்வித்திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

*மதலங்கா* எனும் தொனிப் பொருளில் ஜனாதிபதி செயலகத்திலுள்ள உத்தியோகத்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி. இராசையா கேட்டுள்ளார். (ஓ-9-29)

## தொழிற்திறன் கண்காட்சி

யாழ். கல்வி வலய முறைசாராப் பிரிவின் தொழிற்திறன் கண்காட்சி எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி நிகழ்வை யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

கண்காட்சி நிகழ்வில் உடையலங்காரம், ஜசிங், சமயற்கலை, அழகுக்கலை, கணனி திருத்துதல், அச்சுப்பதித்தல், கைப்பொருள் உற்பத்தி ஆகிய உற்பத்திப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இதேவேளை 2008 ஆம் ஆண்டு முறைசாராப் பிரிவின் தொழிற்துறைத்திறன் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களிற்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ-7-14)

## ஆதரவற்ற நிலையில் தன் சிசுவைப் பிரிய முயன்ற தாயும் சேயும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாரின் பெரு முயற் சியினால் பிறந்து 2 நாளான பெண் சிசுவும் தாயும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வட்டுக் கோட்டை கோட்டைக்காடு வைத்திய சாலையில் பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு வருகின் றார்கள்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வன்னியில் இடம்பெற்ற போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு தனது கணவரையும் இரண்டு பிள்ளைகளையும் இழந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் இருந்து எவரது உதவியும் இன்றி யாழ்ப்பாணம் வருகை தந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த 28 வயது நிரம்பிய பெண்ணொருவர் கடந்த 11 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் பெண் சிசுவொன்றை பெற்றெடுத்துள்ளார்.

தனக்கும் குழந்தைக்கும் உரிய பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்கப் பொறாமையினால் குழந்தையை யாரிடமாவது ஒப்படைத்து விடவேண்டுமென மிகவும் மனவிரக்தியடைந்த நிலையில் காணப்பட்டார். இவ் நிலையினை தமக்கு சாதகமாக பயன்படுத்திய சிலர் சட்டத்திற்கு புறம்பான முறையில் குழந்தையை வாங்க முயற்சித்தனர்.

இச் சம்பவத்தினை அறிந்த மூளாய், தென்னிந்திய திருச்சபை போதகர் எஸ். யோசுவா இச் சம்பவத்தினை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. எஸ். டர்சனவின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

உடனடியாக தாயையும் குழந்தையையும் பாதுகாப்பாக மீட்ட வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் அவர்களுக்கான சகல உதவிகளையும் வழங்கி தற்போது வட்டுக்கோட்டை கோட்டைக்காடு வைத்தியசாலையில் பாதுகாப்பாக பராமரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

எவரது உதவியும் இல்லாதிருந்த எனக்கு பொலிஸ் பொறுப்பதிகாரியும் பொலிஸாரும் போதகரும் உதவி புரியாவிட்டால் தனதும் குழந்தையினதும் நிலை பரிதாபகரமாக அமைந்திருக்குமென்று மிகவும் மனவேதனையோடு அந்த தாய் தெரிவித்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. (ஓ-27)

## படகு பாதை சேவை சீரின்மையால் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை - காரைநகர் பாதை சேவை அடிக்கடி தடைப்படுவதால் மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

அண்மையில் இப்பாதைப்படகு திருத்த வேலைகள் காரணமாகத் தடைப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட பின்னர் சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே.

மீண்டும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் இப்படகு பாதை சேவையிலீடுபட முடியாதுள்ளதால் கடற்படையினரின் உதவியுடன் பொதுமக்கள் அப்போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதன்போது கால தாமதங்கள் ஏற்படுவதாகவும் பொது மக்கள் பல அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

## வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மட்ட கணிப்பீடு தொடர்பான விசேட கலந்துரையாடல் இசுறுபாயவிலுள்ள பரீட்சைத் திணைக்களத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு பதில் பரீட்சை ஆணையாளர் எச்.ஜே.சி.ஏ ஜயசுந்தர அறிவித்துள்ளார். (ஓ-7-14)

## சங்கரத்தையில் மீளக்குடியேறிய மக்களுக்காக வட்டுக்கோட்டை பொலிஸார் மலசலகூடம் அமைத்து பாவனைக்கு விட்டுள்ளனர்

.வன்னிப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்து சங்கரத்தை துணைவி ஜே/159 பிரிவில் வசித்து வருகின்ற 53 குடும்பங்களை சேர்ந்த மக்களின் பாவனைக்காக புதிய இரண்டு மலசல கூடங்கள் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களின் குறைகளை கேட்டறிவதற்காக சென்ற வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எஸ். டர்சன தலைமையிலான குழுவினரிடம் தமக்கு மலசல கூடம் அமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்தனர்.

இவ் மக்களின் வேண்டுகோளிற்கு இணங்க பொதுமக்களின் உதவியோடு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் உடனடியாக இரண்டு மலசலகூடங்களை அமைத்து பொதுமக்களின் பாவனைக்காக வழங்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் மக்களின் தேவைகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.எஸ்.டர்சன மேலும் தெரிவித்தார். (ஓ-27)

## புனித-சவேரியார் திருவிழா

குளமங்கால் மற்றும் யாழ் திருநெல்வேலியிலுள்ள புனித சவேரியார் ஆலயங்களில் புனித - பிரான்சிஸ் சவேரியாரின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. தென்னிந்தியாவில் கோவை நகரில் புனித - சவேரியாரின் உடல் (சரீரம்) அழியாது இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ஓ-72)

## உரிமை கோரப்படாத துவிச்சக்கர வண்டி

(யாழ்ப்பாணம்)

NDB வங்கியின் திறப்பு விழா அன்று ஆண்கள் பயன்படுத்தம் கறுப்பு லுமாலா துவிச்சக்கர வண்டி ஒன்று நியூ ஏசியன் சென்ரர் 56/15 ஸ்ரான்லி வீதி (சம்பத் வங்கி அருகாமை) யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இருந்து கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

இன்று வரை உரிமை கோரப்படாமல் உள்ள துவிச்சக்கர வண்டியை உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெறமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-9-17)

## யாழ். மத்திய கல்லூரியின் விஞ்ஞான தினமும் சஞ்சிகை வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் விஞ்ஞான மன்றம் நடத்தும் விஞ்ஞான தினமும் 'மத்திய ஆய்வாளன்' எனும் சஞ்சிகை வெளியீடும் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் விஞ்ஞான மன்றத் தலைவர் செல்வர். பா. ஷரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்லூரி பழைய மாணவனும் யாழ். யு.என்.டி.பி தலைமை அலுவலகத்தில் பணி புரிபவருமாகிய கே.வி. நிசாந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் சஞ்சிகை ஆய்வுரையை யாழ். கல்வி வலய ஆசிரிய நிலைய முகாமையாளர் ஞா. இரத்தினசிங்கம் வழங்கவுள்ளார்.

நிகழ்வில் சஞ்சிகையின் முதற்பிரதியை கல்லூரி பழைய மாணவரும் யாழ் சம்பத் வங்கி முகாமையாளருமான பி. சங்கர் பெறவுள்ளார்.

தொடர்ந்து சிறப்பு பிரதி வழங்கும் நிகழ்வும், மத்திய கல்லூரிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையில் கணனியில் வினாடி வினாப் போட்டி நிகழ்வும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ-9)






தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நிகழ்வில் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய அதிபர் கே.கே. யோகநாதன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் எஸ். கிருஷ்ணதாஸ், வடமராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சுந்தரமூர்த்தி ஆகியோர் விரிவுரைகளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 1 விதி எண் : 9

### உடலமைப்பு

பிறந்த எண் 1, விதி எண் 9 ஆகக் கொண்டவர்கள் சூரியன், செவ்வாய் இருவரின் கூட்டு அதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் உயரமானவர்களாக இருப்பர். பார்ப்பதற்கு கம்பீரத் தோற்றத்துடனும், கவர்ச்சியாகவும் இருப்பர். உடல் பலம் மிகுந்தவர்கள்.

### மன, குணவியல்பு

இவர்கள் அஞ்சாநெஞ்சம் கொண்டவர்கள். எதையும் துணிந்து செய்துவிடுவர். அதனால் ஏற்படப் போகும் விளைவுகளைப் பற்றி முன்னர் யோசிக்கமாட்டார்கள். நடந்து விட்ட பிறகுதான் உணர்ந்து வருந்துவர்.

சுதந்திரப் பிரியராகவும் யாருக்கும் அடங்காத தன்மையுடையவராகவும் இருப்பர். தன்னம்பிக்கை மிகுந்தவர். இவர்கள் பிறர் சொல்வதிலுள்ள நல்லது கெட்டதைக் கிரகித்துக் கொள்வர். இருந்தாலும் பிறருக்கு விட்டுக் கொடுக்கமாட்டார்கள்.

இவர்களுக்குப் பலர் நண்பர்களாக இருப்பர். ஆனால் அனைவரிடமும் வெளிப்படையாகப் பழக மாட்டார்கள். தேர்ந்டெுத்த ஒரு சிலருக்காக எதையும் விட்டுக் கொடுக்கவும் தயங்கமாட்டார்கள். இவர்கள் ஒரு சமயம் தாராளமாகவும், மறு சமயம் கஞ்சத்தனமாகவும் இருப்பர்.

இருப்பினும் பிறருக்கு உதவும் நல்ல குணம் இவர்களிடம் காணப்படும்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் ஆரம்ப வாழ்க்கை போராட்டம் மிகுந்தவராக இருந்தாலும் பிற்காலம் மகிழ்ச்சியான வாழ்க்கையாக அமையும். இவர்களுக்கும் பெண்களுக்கும் எப்போதும் ஒத்துவராது. பெண்களால் கலகமும், அதனால் குடும்பத்தில் குழப்பங்களும் ஏற்படுவதாக இருக்கும்.

### தொழிலும் வருமானமும்

இவர்களுக்கு நெருப்பு, இரும்பு போன்ற உலோகத் தொடர்புடைய தொழில்களிலும் அது தொடர்பான நிறுவனங்களிலும் பணிபுரியக் கூடும். இவர்களில் சிலர் பஞ்சாயத்து தலைவர் வழக்கறிஞர் போன்று இருக்கக் கூடும்.சமரசம் செய்வதில் கெட்டிக்காரராக இருப்பர்.

அரசியலில் ஈடுபாடும், தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கக்கூடும்.

பொதுவாகவே இவர்கள் பிறந்த ஊரில் இல்லாது வேறு இடத்தில் குடியேறி வசிப்பவராக இருப்பர். பிற்கால வாழ்க்கையில் சுபீட்சமாக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு வயிற்று வலி மற்றும் மூட்டு சம்பந்த வலிகள் ஏற்பட்டுத் தொல்லை கொடுக்கும். நீர் சம்பந்த நோய்களும் வர வாய்ப்புண்டு. மதுமேகம் என்னும் நீரிழிவு நோய்க்கு ஆளாகவும் கூடும். இவர்களுக்கு எதிர்பாராத விபத்துகளும் அதனால் பாதிப்புகளும் நேரலாம்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சூரியன், செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 1,9 ஆகியவற்றிலும் சுக்கிரனின் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 எண்ணிலும் யோகமான பலன்கள் அளிக்கும் விஸ்தார எண் வருமாறு தம் பெயரை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 1,9,6 தொடர்பில் யோகப் பலன் தரும் விஸ்தார எண்ணில் பெயர் அமைப்பது அதிர்ஷ்டமாகும்.

இந்தவகை 1,9,6 எண்களும், திகதிகளும் கூட யோகமானவையே. ஆனால் குரு சனியின் ஆதிக்கத்திற்குட்பட்ட 3,8 தொடர்புடைய எண்களும், திகதிகளும் அனுகூல மற்றவை.

### பெயர் அமைக்க கவனிக்க வேண்டியவை

இதுவரை பிறந்த எண் 1 க்கு விதி எண் 1 முதல் 9 வரையிலான பலன்களைக் கண்டோம்

பிறந்த எண்ணுக்கு விதி எண் நட்பாக இருக்குமானால் இதுவரை கூறப்பட்ட பலன்கள் நடக்கும். பகையாக இருக்குமானால் பலன்களிலும் நிச்சயமற்ற தன்மை காணப்படும். அந்நிலையில்தான் இரண்டு எண்களுக்குப் பொருத்தமான யோகப்பலன் தரும் எண்களுக்கு அமைத்துக் கொள்வதால் நற்பலன்களைப் பெறக்கூடும்.

இரண்டு எண்களும் ஒன்றுக்கொன்று பகையாக இருக்கும் நிலையில் இவர்களுக்கு நல்ல பலனளிக்கும் எண்கள் திகதியையும் பாதக பலனளிக்கும் எண்கள் திகதியையும் வரையறுத்துக் கூறமுடியாத இக்கட்டான நிலை ஏற்படவும் கூடும்.

அந்தச் சந்தர்ப்பங்களில் அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் அதுவரை நடந்த நல்ல நிகழ்ச்சிகள் கெட்ட நிகழ்ச்சிகளைக் குறித்து அதில் நல்லது நடந்து எண்கள் (பாஸ் செய்த சர்டிபிகேட் எண், அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் எண், திருமண நாள் போன்றண) மற்றும் திகதியை நல்ல பலனளிக்க வல்லவை என்றும் அதைப் போன்று தீய நிகழ்ச்சி நடந்த எண்களும், திகதியும் யோக மற்றவை என்றும் நிச்சயிக்கலாம்.

இதுவரை கூறப்பட்ட மன, குணவியல்பு குடும்ப வாழ்க்கை' போன்றவற்றில் தீயதாக இருப்பின் பிறவி எண், விதி எண்ணுக்குப் பொருந்தும் பெயர் அமைத்துக் கொள்ள அதனால் ஏற்படும் கொடிய பலன் தவிர்க்கப்படும்.

ஒவ்வோர் எண்ணுக்குரியவருக்கும் கூறப்பட்டுள்ளவை அவர்களுக்குப் பொருந்தக் கூடிய தொழில்கள் அவர்களுக்கு பெயர் எண், பிறவி மற்றும் விதி எண்ணுக்குப் பொருத்தமாக யோகமுள்ளதாக இருப்பின் தொழில் முன்னேற்றமும் பொருளாதாரத்தில் செழிப்பும் பெறலாம்.

ஒரு சிலர் தமக்குப் பொருந்தாத தொழிலில் ஈடுபட்டிருப்பாரேயானால் அவர்கள் பொருந்தும் தொழிலுக்கு தம்மைத் திருப்பிக் கொண்டு முன்னேறலாம்.

ஆரோக்கியக்கேடு இயல்பாக ஏற்படக் கூடியதே. தம் பெயரைப் பொருத்தமுள்ளதாக அதிர்ஷ்டமாக அமைத்துக் கொண்டால் நோய் ஏற்பட்டாலும் அதனால் பெருமளவு பாதிப்பின்றித் தவிர்க்கப்படலாம்.

இனி பெயரை அமைத்துக் கொள்வதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களை ஆராய்வோம்.

பிறந்த எண் 1 ஆகக் கொண்டவர்கள் சூரியன் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்களின் விதி எண் எதுவாக இருந்தாலும் இவர்களுக்கு ஆதார எண் வரக்கூடிய எண்களுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ள யோகமானது. இருந்தாலும் இவர்கள் 2,8 ஐத் தவிர்க்க வேண்டும். இந்த எண் சந்தோஷமான முன்னேற்றமான வாழ்க்கைக்கு நல்லதல்ல. விதி எண் 2 ஆகக் கொண்டவர்கள் 1 ஐ விலக்குவது நல்லது.

செவ்வாய் ஆதிக்கத்திற்குட்பட்ட 9 ஆதார எண் வருமாறு பெயர் அமைப்பதும் சோதனையானது. விதி எண் 9 ஆகக் கொண்டவர் மட்டுமே வேறு 1,6 எண்ணுக்கு பெயர் அமைக்க பெரிய சிரமம் இருக்குமானால் 9 எண்ணில் அது யோகமான பலன் அளிக்க வல்லதா என்பதை ஆராய்ந்த பின்பு அமைத்துக் கொள்ளலாம்.

8 என்பது சனியின் ஆதிக்கத்திற்குட்பட்ட எண் இந்த எண் வருமாறு சூரியன் ஆதிக்கத்திற்குட்பட்ட 1 எண்ணுடையோர் தம் பெயரையோ தம் நிறுவனத்தின் பெயரையோ அமைத்துக் கொள்வது சோதனையாகிவிடும். கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

சுக்கிரனின் ஆதிக்கத்திற்குண்டான 6 இவர்களுக்கு யோகமளிக்க வல்லது என்று பொதுவாகக்கூறலாம். ஆனால் விதி எண் 3 ஆகக் கொண்டவர்கள் 6 ஆதார எண் வருமாறு தம் பெயரோ ,நிறுவனப் பெயரோ அமைக்காமல் இருப்பது சிறப்பானது.

இதுவரை கூறப்பட்ட அம்சங்களை நன்கு கவனித்து அதற்கேற்ப யோகப்பலன் அளிக்கவல்ல எண்களுக்கு பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஆரோக்கியத்தோடு கூடிய ஆனந்தமான வாழ்க்கையைப் பெறலாம். அதைப் போன்று தம் நிறுவனங்களும் பெயர் அமைக்க, முன்னேற்றமும் லாபமும் பெருகும். (தொடரும்)

## உலகில் உணவு உற்பத்தி அதிகரிக்கப்படாவிடின் மக்கள் உணவு பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிடும்

### ஐ.நா.வின் உணவு விவசாய அமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

உலக பட்டினி மற்றும் சனத்தொகை சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தனியொரு உலகளாவிய நோக்கு அவசியமாகவுள்ளதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

உலக உணவு விலைகளை ஸ்திரப்படுதும் இலக்கில் ரோமில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் உச்சிமாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் ஒரு பில்லியன் பேர் பட்டினியால் வாடுவதாகவும், வளர்ச்சியடைந்து வரும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கிறது.

உலக மட்டத்தில் உணவு விலைகள் அதிகரித்தமைக்கு ஒரு வருடம் கழித்து இந்த உலக உணவு பாதுகாப்பு தொடர்பான உச்சி மாநாடு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான உச்சிமாநாட்டுடன் இந்த உணவு விலைகள் தொடர்பான உச்சி மாநாட்டை ஒருங்கிணைக்க வேண்டிய தேவையுள்ளதாக பான் கீ மூன் குறிப்பிட்டார்.

காலநிலை பாதுகாப்பு இன்றி உணவு பாதுகாப்பை ஏற்படுத்த முடியாது என அவர் வலியுறுத்தினார்.

2050 ஆம் ஆண்டுக்குள் உலக சனத்தொகையானது 9.1 பில்லியனாக உயரும். இந்நிலையில் 2050 ஆம் ஆண்டுக்குள் நாம் 70 சதவீதம் அதிகமான மேலதிக உணவை உற்பத்தி செய்ய வேண்டிய தேவைப்பாடு உள்ளது.

நாங்கள் எமக்கான உணவுகள் தொடர்பில் ஏழை மக்களைப் பாதுகாக்கும் வகையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என அவர் கூறினார்.

உணவு உற்பத்திக்கு மேலதிக நிலத்தை பயன்படுத்தத் தவறும் பட்சத்தில் 2050 ஆம் ஆண்டுக்குள் 370 மில்லியன் மக்கள் உணவு பற்றாக்குறையை எதிர்கொள்ள நேரிடும் என ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு எச்சரித்துள்ளது. (ஓ-6)

## மது போதையில் சிறுமியைக் கடத்தி கொலை செய்த நபர் கைது

(கொழும்பு)

பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் 05 வயதான சிறுமியொருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று நீர்கொழும்பு – கொச்சிக்கடைப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

நிபுனி ரசாணி என்ற சிறுமியே இவ்வாறு பரிதாபகரமாக மரணத்தைத் தழுவியவராவார். இச்சம்பவம் க்டந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் தந்தையின் நண்பர் ஒருவரே சிறுமியின் வீட்டுக்கருகில் உள்ள புதர்கள் நிறைந்த பகுதியில் வைத்து சிறுமியைப் பாலியல் வல்லுறவு புரிந்து கொலை செய்துள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக தங்கொட்டுவைச் சேர்ந்த பிரேமச்சந்திர என்ற குடும்பஸ்தர் வென்னப்புவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

சிறுமியின் தந்தையும், அவரது நண்பரும் (சந்தேக நபர்), அயலவர் ஒருவரும் மது அருந்திவிட்டு கொச்சிக்கடை பழைய வீதி, தெற்கு வாய்க்கால் பிரதேசத்தில் அமைந்துள்ள சிறுமியின் வீட்டுக்கு வந்துள்ளனர்.

அங்கு சிறுமியுடன் அளவளாவிக் கொண்டிருந்த சந்தேக நபர் பின்னர் யாரும் அவதானிக்காத வண்ணம் சிறுமியைத் தூக்கிக் கொண்டு சென்றுள்ளார்.

இரவு 8 மணியளவில் சிறுமியின் தயார், பிள்ளையைத் தேடிய போதே அவர் காணாமல் போயுள்ள விடயம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குடும்பத்தினரும் அயலவர்களும் சிறுமியையும் சந்தேக நபரையும் பல இடங்களிலும் தேடியும் அவர்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. பின்னர் வென்னப்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

ஆயினும் பொலிஸார் குறித்த முறைப்பாட்டினைப் பதிவு செய்யாமல் சிறுமியை மீண்டும் தேடிப்பார்க்குமாறு கூறியதாக சிறுமியின் தாயார் தெரிவித்தார்.

இந்நிலையில் மறுநாள் அதிகாலை 1.30 மணியளவில் சிறுமியின் வீட்டிலிருந்து 150 மீற்றர் தூரத்திலுள்ள புதரிலிருந்து சிறுமியின் சடலம் பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009
# பயிற்சி வினாத்தாள் -கணிதம்

## பகுதி-II

By : S. Suthersan.
(Teacher ; Jaffna College.)

### பகுதி - A

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(01) a)

> ரூபா 3,500 ஐ செலுத்தி குளிர்சாதனப் பெட்டியொன்றை வீட்டிற்கு எடுத்துச் செல்க. மீதப்பணம் 10 சம மாதத் தவணையில் ..............

குளிர்சாதனப் பெட்டியின் விலை ரூபா 35,000 ஆகும். வாடகைக் கொள்வனவு முறையில் 16% வருட வட்டியுடன் எஞ்சிய பணம் தவணைக் கட்டணங்களாக செலுத்தப்பட வேண்டும்.

i. ஒரு மாதத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை யாது?
ii. மொத்த வட்டி யாது?
iii. ஒரு தவணைக்கான கட்டணம் யாது?

b) வங்கியொன்று ஆண்டுக்கு $7\,^1/_2\%$ எளிய வட்டிக்கு பணத்தைக் கடனாக வழங்குகின்றது. ஒருவர் வங்கியில் கடனைப் பெற்று உடன் காசுக்கு குளிர்சாதனப் பெட்டியை கொள்வனவு செய்வது, வாடகை கொள்வனவு முறையிலும் இலாபகரமானது எனும் கருத்தை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துக.

(02) சார்பு $Y = (X+4)(X+1)$ இல் X இன் சில பெறுமானங்களுக்கு ஏற்ற Y இன் பெறுமானங்கள் இடம்பெறும் அட்டவணை கீழே காணப்படுகிறது.

| X | -6 | -5 | -4 | -3 | -2 | -1 | 0 | 1 |
|---|---|---|---|---|---|---|---|---|
| Y | 10 | 04 | 0 | -2 | -2 | ..... | 4 | 10 |

a) i. $X = -1$ ஆக இருக்கும்போது Y இன் பெறுமானத்தைக் காண்க?
ii. வரைபுத்தாளில் 10 சிறிய சதுரங்களில் ஓர் அலகு வீதம் வகைக்குறிக்கப்படுமாறுள்ள அளவிடையை எடுத்து மேற் குறித்த பெறுமானங்களைப் பயன்படுத்தி சார்பின் வரைபை வரைக?
iii. $Y = X + 6$ இற்குரிய வரைபை அதே வரைபுத்தாளில் வரைக?

b) உமது வரைபைப் பயன்படுத்தி,
i. சமச்சீரச்சின் சமன்பாட்டை எழுதுக?
ii. சார்பின் இழிவுப் பெறுமானம் காண்க?

c) i. சார்பு $Y = (X+4)(X+1)$ உம் நேர்கோடு $Y = X + 6$ உம் இடைவெட்டும் புள்ளிகளின் X ஆள்கூறுகளால் $X^2 + 4X - 2 = 0$ எனும் சார்பின் தீர்வுகளைப் பெறலாம் எனக் காட்டுக.
ii. $X^2 + 4X - 2 = 0$ இன் தீர்வுகளைப் பெறுக?

d) சார்பு $Y = X(X+4) - (2+G)$ என்பது (0 - 5) இனூடு செல்லுமாயின் G இன் பெறுமானத்தைத் துணிக?


(03) a) ராமுவிடம் 04 நீல நிற மாபிள்களும், 03 சிவப்பு நிற மாபிள்களும், 05 பச்சை நிற மாபிள்களும் உள்ளன. ரவியிடம் 03 நீல நிற மாபிள்களும், 04 சிவப்பு நிற மாபிள்களும் உள்ளன.
குறித்த ஒரு நாளில் இவர்கள் இருவரும் விளையாட்டில் ஈடுபட்டனர்.

i. ஆரம்பத்தில் இருவரிடமும் இருந்த மாபிள்களின் எண்ணிக்கையைக் காட்டும் தாயத்தை எழுதி அதனை X எனப் பெயரிடுக?
ii. விளையாட்டின் போது ராமுவின் சிவப்பு நிற மாபிள் ஒன்று நொருங்கி விட்டது. இந்நிலையில் இருவரிடமும் உள்ள மாபிள்களின் எண்ணிக்கையைக் காட்டும் தாயத்தை எழுதுக?
iii. விளையாட்டின் போது ராமு 02 நீல நிற மாபிள்களையும், 03 பச்சை நிற மாபிள்களையும் தோல்வியடைந்தான். இறுதியில் இவர்களிடையேயுள்ள மாபிள்களைக் காட்டும் தாயத்தை எழுதுக?

b) பரீட்சை ஒன்றில் ரவியும், அமலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகை 42 ஆகும். சரத் என்பவர் அமலின் புள்ளிகளின் இருமடங்கு புள்ளிகளைப் பெற்றிருந்தார். ரவியும் சரத்தும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை 52 ஆகும்.

i. ரவி பெற்ற புள்ளிகளை X எனவும், அமல் பெற்ற புள்ளிகளை Y எனவும், சரத் பெற்ற புள்ளிகளை Z எனவும் கொண்டு சமன்பாடுகளை உருவாக்குக?
ii. சமன்பாடுகளைத் தீர்த்து ஒவ்வொருவரும் பெற்ற புள்ளிகளைத் தனித்தனியே காண்க?

(04) a) முக்கோணி ABC இல், $B\hat{C}A = 55^0$ உம் $AC = 20$ cm உம் ஆகும். முக்கோணி ஆரம்பத்தில் AC கிடையாக இருக்குமாறு நிலைக்குத்து தளத்தில் வைக்கப்பட்டு பின்னர், C பற்றி சுழற்றப்படுகிறது. இந்நிலையில் முக்கோணி A'B'1C' பெறப்படுகிறது. இங்கு ACB' என்பது நேர்கோடு ஆகும்.





i. பக்கம் BC இன் நீளத்தைக் கிட்டிய சென்ரி மீற்றரில் காண்க?
ii. AB' இன் நீளத்தைக் காண்க?
iii. CB' இற்கு மேலே எவ்வளவு உயரத்தில் A' உள்ளது எனக் காண்க?

b) முக்கோணி ABC இல், $A\hat{B}C = 120^0$, $AB = BC$ ஆகும்.
i. தரவுகள் காட்டும் பரும்படிப் படம் வரைக?
ii. பைதகிரஸின் தேற்றத்தையும், திரிகோண கணித விகிதங்களையும் பயன்படுத்தி $AC^2 = 3\,AB^2$ எனக் காட்டுக?

(05) a) சுருக்குக : $\dfrac{10}{5-a} + \dfrac{2a}{a-5}$

b) படத்தில் காட்டப்பட்டிருப்பது, 20m நீளமும், 15m அகலமும் உடைய செவ்வக வடிவ காணியொன்றின் அயற்பக்கங்களில் Xm அகலமான பாதையின் அமைவு ஆகும்.




i. பாதையின் பரப்பளவிற்கான அட்சர கணித கோவையை எழுதுக?
ii. பாதையின் பரப்பளவு 104 $m^2$ எனின், பாதையின் வர்க்க நிறைவாக்கலின் மூலமாகவோ அல்லது வேறு வழியாலோ பாதையின் அகலத்தைக் கிட்டிய முதலாந் தசம தானத்திற்கு தருக?

(06) நகரமொன்றில் வசிக்கும் 600 பேரிடையே "சர்க்கரை வியாதி" யால் பீடிக்கப்பட்டவர்களின் வயது விபரங்களை கீழுள்ள அட்டவணை காட்டுகிறது.

| வயது (ஆண்டுகள்) | 25 - 29 | 30 - 34 | 35 - 39 | 40 - 44 | 45 - 49 | 50 - 54 | 55 - 59 |
|---|---|---|---|---|---|---|---|
| நோயாளர்களின் எண்ணிக்கை | 09 | 50 | 107 | 144 | 146 | 104 | 10 |

i. இவர்களில் எவ்வயதினர் அதிகமாக "சர்க்கரை வியாதி" யால் பாதிக்கப்பட்டுள்ளனர்?
ii. பகுதி (i) வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு "சர்க்கரை வியாதி" யினால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவரின் சராசரி வயதை கிட்டிய ஆண்டுகளில் கணிக்குக?
iii. ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் 250 பேர் பெண்களாவர். இவர்களின் இடை வயது 46 எனின், ஆண்களின் இடை வயதை கணிக்குக,
iv. இதிலிருந்து வரத்தக்க முடிவு யாது?

# துறைமுக ஊழியர்களின் அடிப்படை சம்பளம் 1000 ரூபாவால் அதிகரிப்பு

## 2000 ரூபா மேலதிக கொடுப்பனவு - அமைச்சர் சமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

துறைமுக ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப் படுவதோடு மேலதிக கொடுப்பனவாக இரண்டாயிரம் ரூபாவும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் துறைமுக ஊழியர் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டு அவர்கள் வழமையான முறையில் தமது கடமையில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர் என்று விமான சேவைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது, துறைமுக ஊழியர்களின் தொழிற்சங்கஙளுடன் இடம்பெற்ற பல சுற்றுப் பேச்சுக்களின் பின்னர் சம்பள அதிகரிப்பு தொடர்பான தீர்மானம் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது.

அதன்படி அடிப்படை சம்பளம் ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்படுவதோடு மேலதிக கொடுப்பனவாக இரண்டாயிரம் ரூபாவும் துறைமுக ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அந்த வகையில் ஜனவரி மாதத்திலிருந்து சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

எனினும் இவ்வருடத்தின் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான நிலுவைப் பணமும் வழங்கப்படும்.

அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அனைத்து தொழிற்சங்கங்களும் எழுத்து மூலம் இணக்கம் தெரிவித்துள்ளன. 9 தொழிற்சங்கங்கள் மட்டுமே இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டன. குறித்த 9 தொழிற்சங்கங்களும் இணக்கத்துக்கு வந்து விட்டன என்று தெரிவித்தார். (ஓ-4)

# அரசுக்கு சாதகமான நிலை இல்லாததால் தேர்தல் குறித்து ஜனாதிபதி அறிவிக்கவில்லை

## ஐ.தே.க. எம்.பி கயந்த கருணாதிலக்க

(கொழும்பு)



அரசாங்கத்திற்கு பாதகமான சூழ்நிலை காணப்படுகின்றமையினாலேயே தேர்தல்கள் தொடர்பில் ஜனாதிபதி எவ்வித அறிவிப்புக்களையும் விடுக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த தேர்தல்கள் தொடர்பில் கேட்டறிந்து கொள்வதற்காக தூரப் பிரதேசங்கிளிலிருந்து கொழும்பு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் வெறுங்கையுடன் வீடு திரும்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க அமைச்சர்கள் எந்த விதமான அர்ப்பணிப்புக்களையும் மேற்கொள்வதில்லை எனவும் அனைத்து அர்ப்பணிப்புக்களையும் மக்களை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் அழுத்தம் கொடுப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உலகச் சந்தையில் பொருட்களின் விலை குறைவடைந்தாலும் அதன் நன்மைகள் மக்களுக்குச் சென்று சேர்வதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஊதிய உயர்வு கோருவோர் வாழ்க்கைச் செலவை குறைக்குமாறு கோருவோர் உள்ளிட்ட அனைவரையும் இந்த அரசாங்கம் தேசத் துரோகிகளாகவே நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)

# கூட்டமைப்பு எம்.பி.யின் புதல்வர் கோத்தபாய கொலை முயற்சியுடன் தொடர்பு

## திவயின தகவல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் புதல்வர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை படுகொலை செய்யும் சதித் திட்டத்தில் தொடர்பு பட்டிருப்பதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் புதல்வர் என்பது விசாரணைகளின் மூலம் புலனாகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாஜ ராஜபக்ஷவை படுகொலை செய்வதற்கான திட்டங்களை குறித்த நபரே தீட்டியதாகவும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பிரதித் தலைவர் ஒருவர் அவருக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

குறித்த அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதித் தலைவரின் இல்லத்தில் இருந்து கொண்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இவருக்கு இராணுவ உயர் அதிகாரி ஒருவரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

### இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான க.பொ.த. சாதாரண தர விண்ணப்ப முடிவுத்திகதி இன்று

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்து மீளக்குடியமர்ந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இன்று புதன்கிழமை வரை பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

குறிப்பாக வெளிவாரியாக தோற்றவிருக்கும் மாணவர்கள் இதுவரை விண்ணப்பித்திருக்காதிருப்பின் உடனடியாக விண்ணப்பிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஓ-7-14)

# மியன்மார் தலைவரின் விஜயத்தை எதிர்த்து கட்டுநாயக்கா செல்லும் வழியில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்திருந்த மியன்மார் அதிபர் தன் சூ நாடு திரும்புவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையில் அவரது விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

கட்டுநாயக்க கொழும்பு பிரதான வீதியில் அமைதியான முறையில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. சுதந்திரத்திற்கான அமைப்பு, இரண்டாம் உலக யுத்த நண்பர்கள் அமைப்பு ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தலையில் கறுப்புப்பட்டி அணிந்திருந்ததுடன் எதிர்ப்பு சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

'தேர்தல் மூலம் தெரிவான அரசாங்கம் 20 வருடமாக சிறையில்', 'ஆங்கான் சூகியை விடுதலை செய்', 'மியன்மாரில் ஜனநாயகத்தை நிலைநிறுத்து', 'மதகுருமாரை கொலை செய்த மியன்மார் தலைவரே, வீட்டுக்குப் போ', போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதேவேளை அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோருக்கு பொலிஸார் உத்தரவிட்டனர். நீர்கொழும்பு பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் விக்கிரமரத்ன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரிடம் இதனைத் தெரிவித்த போது, இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் செல்லும் சுற்று வட்டத்திற்கு சற்றுத் தொலைவில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### சரக்கொன்றை

Botanical Name- Cassia fistula
Family - Leguminosae
Engl - Purging Cassia
Sinh - Ehela

சிறிய அல்ல நடுத்தர மரமாகும். மெல்லிய பலமான நீண்ட கிளைகளையுடையது. இலை கூட்டிலை, ஒன்றுவிட்ட இலையமைப்பு கொண்டது. இருபாலான ஒழுங்கற்ற பெரிய மெல்லிய மஞ்சள் நிறமுடைய பூக்கள்.

பூக்கள் கீழ்நோக்கி கொடியாகத் தொங்கியபடி அழகாக காட்சியளிக்கும். 30-60 செ.மீ நீளமுடைய காய்கள் காணப்படும். ஒரு காயினுள் 25-100 விதைகள் காணப்படும். கோளவடிவ சிறிய விதைகளாகும். பூக்கள் ஆடி முதல் ஆவணிமாதம் வரை காணலாம்.

### இனவிருத்தியும் பரம்பலும்

வெப்பமான இடங்களில் வளரக்கூடியது. யாழ். மாவட்டத்தில் பொதுவாக இந்து ஆலயங்களில் காணலாம். விதைகள் மூலமும், வேர்க் கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவப் பயன்கள்

◆ சரக்கொன்றையின் கொழுந்து இலைகளைப் பறித்து வேகவைத்து பிழிந்து சாறு எடுக்க வேண்டும். 15 மில்லி சாற்றை தேன் கலந்து உட்கொண்டால் வயிற்றில் தங்கியுள்ள கிருமிகளும், திமிர்ப்பூச்சிகளும் மலத்துடன் வெளியேறிவிடும்.

◆ சரக்கொன்றை இலைகளை நன்றாக அரைத்து உடலில் தோன்றும் தோல் நோய்களுக்கு குறிப்பாக தேமல், படர் தாமரை போன்றவற்றிற்கு பூசலாம்.



◆ இலையை துவையல் செய்து சோற்றுடன் கூட்டியுண்ண மலம் கழியும்.

◆ சரக்கொன்றை மலர்களை தனியாகவோ, அதன் கொழுந்துகளுடன் சேர்த்தோ அரைக்க வேண்டும். அதைப் பாலுடன் கலக்கியுண்டால் வெள்ளை சாய்தல், இரத்தக் குறைவு, காமாலை ஆகியன தீரும்.

◆ சரக்கொன்றை பூவை, எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து உடலில் தேய்த்துக் குளித்தால் தேமல், சொறி, நமைச்சல், கரப்பான் முதலிய தோல் நோய்கள் தீரும்.

◆ சரக்கொன்றை மலர்களை குடிநீரிட்டு உட்கொள்ள வயிற்றுவலி, குடலைப் பற்றிய நோய்கள் விலகும்.

◆ சரக்கொன்றை மலர்களை பாலுடன் சேர்த்துக் காய்ச்சி உட்கொள்ள உடலில் உள் உறுப்புக்களை வலிமைப்படுத்தும். இது மெலிந்தோருக்கு மிகவும் பலமும், பலனும் தரும்.

### சரக்கொன்றைப்புளி:

◆ ஈயம் பூசிய ஒரு பாத்திரத்தில் சரக்கொன்றைக் காய்களில் ஒட்டிக் கொண்டுள்ள புளியையும், சக்கைகளையும் ஒன்றாக இட வேண்டும். ததும்ப போதிய தண்ணீரை விட்டு 6 மணிநேரம் வரை புளியை ஊறவைக்க வேண்டும். அடிக்கடி துளாவிக் கொண்டிருக்க வேண்டும். பின்பு துணியில் அதனை நன்றாக வடிகட்டி அடுப்பிலேற்றிக் காய்ச்ச வேண்டும். குழம்பு பதத்தில் இறக்கி ஆற வைத்து ஒரு புட்டியில் ஊற்றி பத்திரப்படுத்தவும். இதுதான் சரக்கொன்றைப் புளி. இதில் 2-4 கிராம் அளவு எடுக்க நன்றாக பேதியாகும்.

◆ சரக்கொன்றை புளியை குடிநீர் காய்ச்சி நீரிழிவு நோயாளிகட்கு 30-60 மில்லி அளவு காலை, மாலை கொடுக்கலாம்.

◆ சரக்கொன்றை புளியை நீரில் கரைத்து கொதிக்கவைத்து கைகால் பிடிப்பு, கீழ் பிடிப்பு, மூட்டுவாத நோயிற்கு பூசிவந்தால் பிடிப்பு தீரும்.

◆ குழந்தைகளுக்கு வயிற்றுப்பிரம், உள்ள போது சரக்கொன்றை புளியை அரைத்து தொப்புளைச்சுற்றி பற்றிட்டால் குழந்தைகளின் வயிற்றுப் பொருமல் நீங்கி வாய்வும் நீங்கும்.

◆ 100 கிராம் சரக்கொன்றை பட்டையை பொடித்து 400 கிராம் நல்லெண்ணெயுடன் சேர்த்துக் காய்ச்சி பதமுற இறக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

இதைக் கை, கால்களில் ஏற்படுகின்ற படை, படர்தாமரை கட்டி முதலியவற்றிற்கு பூச விரைவில் குணமாகும்.

◆ சரக்கொன்றை வேர்ப்பட்டையும் சிறிது மிளகு சீரகம் சேர்த்து குடிநீர் காய்ச்சி அருந்தினாலும் மேற்கூறிய தோல் நோய்கள் தீரும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

◆ கொன்றை மரத்தின் பட்டை, தூதுவளைச் செடியின் வேர், தண்டு, இலைகளை பொடியாக நறுக்கி வெய்யிலில் காயவைத்து உரலில் போட்டு இடித்து துணியில் அரித்து ஒரு வாயகன்ற சீசாவில் பத்திரப்படுத்தவும். அரை தேக்கரண்டி அளவு காலை, மாலை தேனில் உட்கொள்ள ஆஸ்மா, சளி, இருமல் குணமாகும். இவ்வாறு ஒரு மாதகாலம் உட்கொள்ளலாம்.

# நாடும் மக்களும்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

57

கற்புத் தவறிய பெண்களில் பலர் அடிமைகளாக விற்கப்பட்டனர். இப்பழக்கம் சாதிப் பிரிவினைக்கு ஏற்றாற்போல நடைபெற்றது. அந்தணர்கள் கோமுட்டிகள் முதலிய வகுப்பைச் சேர்ந்த பெண்கள் கற்புத் தவறினால் விபசாரம் செய்தவர்கள் என்று பிறர் அறியும் படி கைகளில் சூடிட்டு சாதி விலக்கம் செய்யப்பட்டனர். மற்றைய வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஈவிரக்கம் இன்றி அடிமைகளாக விற்கப்பட்டனர். மலை நாட்டில் வேலையின்றியும் அனாதைக ளாகவும் சுற்றித் திரிந்து இளைஞர்களை அந்நாட்டுத் தலைவர்கள் அடிமைகளாக விற்று விடுவது வழக்கம். அடிமை வியாபாரம் நடைபெற்ற போதிலும் அடிமைகள் இரக்கமுடன் நடத்தப் பட்டதாகத் தெரிகிறது.

**பொருள் உற்பத்தி செய்தவர்கள்**

உழவுத் தொழில் செய்து உணவுப் பொருட்களை உண்டாக்கியவர்களும் கைத்தொழில் செய்து நுகர்ச்சிப் பொருட்களை உண்டாக்கியவர்களும் என்று உற்பத்தி செய்வோர்களை இருவகையாகப் பிரிக்கலாம். விஜய நகர ஆட்சியிலும் தென்னிந்தியாவில் உழவுத் தொழிலே முக்கிய தொழிலாக இருந்தது. உழவு வேலை இல்லாத காலங்களில் மற்றக் கைத் தொழில்களை செய்வது வழக்கம். உழவர்களிற் சிலர் ஆயர்களாக ஆடு மாடுகளை வளர்த்தனர். பசுக்களையும் எருமைகளையும் பேணி வளர்த்து அவைகளிடமிருந்து பால் வளத்தைப் பெற்று பாற்பயனாகிய தயிர் , மோர் , வெண்ணெய் , நெய் முதலிய உணவுப் பொருட்களை உற்பத்தி யாக்கினர். பசுக்களைப் பாதுகாத்தவர்கள் இடையர்கள் என்றும் ஆடுகளை வளர்த் தோர் குரும்பர்கள் என்றும் பெயர் பெற்றனர். அரசாங்கமும் இடையர்களுடைய நலத்தைக் கருதி உரிய காலங்களில் அவர்கள் செலுத்த வேண்டிய வரிகளை நீக்கி பாதுகாப்பளித்தது.

தற்காலத்திலிருப்பது போல் இல்லை யெனினும் தொழிற்சாலைகளில் பலருக்கு வேலையளித்தது. உழவு வேலையற்ற சமயம் உழவர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்தனர்.

ஆயினும் கிராமங்களில் அந்தந்த கிராமங்களுக்குத் தேவையான பொருட்கள் உற்பத்தியாயின. தொழிலாளர் என்ற தனிப் பிரிவு அப்பொழுது இல்லை. கைத்தொழில் இளைஞர்களை நெசவுத் தொழிலாளர் எண்ணெய் உற்பத்தி செய்வோர் எனப் பிரிக்கலாம். கண்மாளர்கள் , பாஞ்சலர்கள் எனவும் அழைக்கப் பெற்றனர். இவர்கள் இரும்புக் கொல்லர் , பொற்கொல்லர் , கன்னாரத் தொழிலர் , தச்சர்கள் , விக்ரகங்களை வார்ப்போர் என ஐவகையாகப் பிரிவுற்றிருந்தனர். இந்த ஐந்து வகையானத் தொழில்களை செய் தோர்கள் விஸ்வகர்மாவின் ஐந்து புதல்வர் களாகிய மனு , மயன் . துவஸ்திரி . சிற்பி விஷ்வக்சே னன் என்போரின் சந்ததியர்கள் என அழைக்கப் பெற்றனர்.

இத் தொழில்களெல்லாம் பரம்பரை குடும்பத் தொழிலையும் சேர்ந்த குடும்பங்கள் தனித் தனித் இனங்களாகப் பிரிந்து விட்டன. இரும்புக் கொல்லர்கள் உழ கலப்பைக் கேற்ற இரும்புச் சாமான்களையும் வண்டிகளுக்கு ஏற்ற இரும்புப் பொருட்களையும் மாடுகளுக்கும் குதிரைகளுக்கும் ஏற்ற லாடங்களையும் செய்தனர். பொற் கொல்லர்கள் மகளிர்க்கும் ஆடவர்க்கும் குழந்தைகளுக்கும் ஏற்ற அணிகலன்கலையும் கோவில் விக்ரகங்களுக்கு ஏற்ற உயர்தர ஆபரணங்களையும் செய்தனர். கன்னார்கள் , கோவில்களுக்கு ம் இல்லங்களுக்கும் ஏற்ற சமையல் பாத்திரங்களையும் விளக்குகள் முதலிய அழகுப்பொருட்களையும் செய்தனர். முதலாம் தேவராயர் காலத்தில் பாஞ்சால இனத்தைச் சேர்ந்தவர்கள் 74 பிரிவுகளாகப் பாகுபாடு அடைந்திருந்தனர் என்று கல்வெட்டுக்களிலிருந்து நாம் உணருகிறோம். மேலும் இவர்களும் இடக்கையார், வலக்கையார் என்றும் பிரிவுற் றிருந்தன.

ரென்றும் இவர்களுக்குள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேற்றுமை கொண்டு தங்களுக்குள் கலகம் செய்து கொண்டனர் ரென்றும் இவர்களுக்குள் உயர்ந்தோர் தாழ்ந் தோர் என்ற வேற்றுமை கொண்டு தங்களுக் குள் கலகம் செய்து கொண்டனர் என்றும் அர சாங்கம் தலையிட்டு அவர்களிடையே அமை தியை நிலை நாட்ட வேண்டியிருந்தது என் றும் அறிகின்றோம். எடுத் துக்காட்டாக மது ரை யை ஆண்ட வீரப்ப நாயக்கர் பாஞ் சால வகுப்பைச் சேர்ந்த ஐந்து இனத்தவரும் தனித் தனியாக பிரிந்து கொள் ளலாம் என உத்தர விட் டுள்ளார். தனிப்பட்ட தொழிற் செய்யும் சாதியைச் சேர்ந்தவர்கள் ஒன் றுபடும் பிரி வினைச் சக்தியே இதற்குக் காரணம் என்று கூறலாம். சமூக அமைப்பில் தனிப் பட்ட உரிமைகளுக்காக பலதிறப்பட்ட மக்களிடையே பெருங்கலங்கள் விளைவது உண்டு.

சமூக அமைப்பில் தாழ்ந்த நிலையில் இருந்தவர்கள் சில உரிமைகளுக்காக பெரு முயற்சியும் செய்தனர். தொழிலாளர்கள் பெரு முயற்சிகிள் எடுத்து பல உரிமைகளைப் பெற்றதும் உண்டு. எடுத்துக்காட்டாக தச்சுத் தொழிலாளர்கள் தேர்த்திருவிழாக்களின் பொழுது தங்களுடைய தலையில் தலைப் பாகை அணிந்து கைகளில் உளியும் சுத் தியும் மரம் அறுக்கும் வாளையும் கொண்டு தேரின் பின் போவது சிலர் இடுப்பில் அங்க வஸ்திரம் அணிந்து போவது வழக்கங்கள் என கல் வெட்டுகளில் இருந்து நாம் உண ருகின்றோம். தறிகளில் துணிகளை நெய்து மக்களுக்கு உடுக்க உடையளித்த கைக் கோளர்கள் அக் காலத்தில் மிக்க செல்வாக்கு பெற்றிருந்தனர்.

தேவாலயங்களை நன் முறை யில் நடத்துவதிலும் கோவில்களுக்குரிய வரி களை விதித்து அவற்றை வசூல் செய்வதிலும் பங்கு கொண்டனர். கோவில்களுக்கு அருகாமையில் அவர்கள்குடியிருந்தனர். அவர் கள் தங்களுக்கெனப்பல உரிமை களை அடைவதற்கு முயற்சி செய்தனர். துணிகளுக்கு சாயம் தேய்த்த தொழிலாளர்களும் இவ்வினத்தைச் சேர்ந்தவராவர் வாழ்விலும் சாவிலும் சங்கு முழக்கம் செய்வது பல்லக்கில் ஊர்வலம் போவது அவர்கள் பெற்ற சில உரிமைகளாகும். எள் , தேங்காய் , முத்துக் கொட்டை முதலிய எண்ணெய் வித்துக்களிருந்து எண்ணெய் உண்டாக்கிய எண்ணெய் வணிகர்களும் இவ்வினத்தைச் சேர்ந்தவராவர். குயவர்கள் , கள்ளிறக்குவோர் , தோல் பதனிடுவோர் முதலிய தொழிலாளர்களும் இருந்தனர். இவர்கள் பற்றி அதிக விவரங்கள் இல்லையெனினும் இவர்கள் சமூகத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் பட்டினத்திலும் சலவைத் தொழிலாளர்களும் நாவிதர்களும் மக்களுக்கு தேவையான சேவை செய்து வந்தனர். சுரங்கங்களில் வேலை செய்து உலோகங்களை எடுத்தவர்களும்இருந்தனர்.

**கிராமச்சபைகள்.**

சபை , ஊர் , நாடு என்ற மூவகையான கிராமச் சபைகள் விஜயநகர ஆட்சிக் காலத்தில் நிலைபெற்றிருந்தன. சதுர்வேதி மங்கலங்கள் என்ற கிராமங்களில் சபைகளும் ஊர்ச்சபைகளும் இருந்தன. பல சதுர்வேதி மங்களங்கள் அடங்கிய பகுதியில்நாடு என்ற அமைப்பு நிலைபெற்றிருந்தது. நானா தேசிகள், மணிக்கிராமம் , மூவாயிரவர் என்ற தொழில்சங்கங்களும், வியாபார சங்கங் களும் அப்போது நிலைபெற்றிருந்தன. மக்களுடைய அன்றாட பொருளாதார வாழ்க்கையில் கோவில்களும்சிறந்த சேவை செய்தன.

கலாநிதி
**தெ.வே.மகாலிங்கம்**

கிராமச் சபைகள் எவ்விதம் தோன்றின என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை அந்தணர்கள் மாத்திரம் வாழ்ந்த பிரம்மதேயக் கிராமங்களில் சபைகள் அமைந்திருந்தன. அந்தணர்களும் மற்றைய இனத்தவர்களும் சேர்ந்து வாழ்ந்த் கிராமங்களில் ஊர்சபைகள் இருந்தன. (தொடரும்)

## சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் இல்லை

**ஜே.வி.பி. எம்.பி. அனுரகுமார**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி. பிக்கும் இடையில் எவ்வித பேச்சுவார்த் தைகளும் நடத்தப்படவில்லை என ஜே.வி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிக்கல் மிகுந்த ஓர் அரசியல் சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் ஊடகங்களில் இவ்வாறான செய்திகள் வெளியிடப்பட்டுள் ளமை தொடர்பில் அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

செய்திகளை வெளியிடும் போது ஊடகங்களின் தர்மீகப் பொறுப்பை எந்தவொரு ஊடகமும் புறந்தள்ளிச் செயற்படக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளருடன் ஜே.வி.பி பேச்சுவார்த்தை நடத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களின் தொழில் சார் தன்மையும் பாதுகாத்துக்கொள்ள லக்பிம போன்ற பத்திரிகைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ஓ-4)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலைக் கிளை நூலகத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் மாணவர்கள் பங்கு பற்றுவதையும் நூலகர் இ.தர்மலிங்கம் மேற்பார்வை செய்வதையும் படத்தில் காணலாம்.

## பௌத்த பிரிவென கல்வி நிலையங்களில் தமிழ் மொழி ஒருபாடமாக புகட்டப்படவுள்ளது

(கொழும்பு)

பௌத்த பிரிவென கல்வி நிலையங்களில் தமிழ் மொழியை ஓர் பாடமாக கற்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் காலங்களில் பௌத்த பிக்குகளாக பயிற்சி பெற்றுக் கொள்ளும் தேரர்களுக்கு தமிழ் மொழி ஓர் பாடமாக புகட்டப்படவுள்ளதென அரசியல் சாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்த நடவடிக்கையாக கண்டி மல்வத்து பீடத்தை அண்டி பிரிவென் உள்ளிட்ட 50 பிரிவென்களில் தமிழ்மொழி ஓர் பாடமாக கற்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் மொழி கற்றுக் கொண்ட சில பௌத்த பிக்குமார் தமிழ் மொழியில தர்ம விரிவுரைகளை நடத்தி வருவதாக அரசியல் சாசன அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (ஓ-4)

## நாட்டை மீளக் கட்டியெழுப்ப சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

**அமைச்சர் துமிந்த திஸாநாயக்க**

(கொழும்பு)

இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பி உறுதி பெறச் செய்யவேண்டிய பாரிய பொறுப்பு சமூகத்தில் உள்ள சகலருக்கும் உரியது. இதற்கு சிறியவர் ,பெரியவர், கட்சி ,இனம், மொழி , மதம் எந்த வேறுபாடும் கிடையாது என கனியவளங்கள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

வட மத்திய மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நான்கு இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட ஹிதோகம துருவில கீழ்ப்பிரதேச புதிய மின் விநியோகத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ,

இந்த நாட்டிலே 27 வருடங்களாக இடம் பெற்ற யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. பல்வேறுபட்ட தியாகங்களோடு பெறப் பட்டுள்ள இந்த சுதந்திரத்தை சக லரும் ஒன்றாக இணைந்து நல்ல அடிப் படையில் பயன்டுத்திக்கொள்ள வேண்டும். அரசாங்கம் மேற்கொள்கின்ற அபிவிருத்திப் பணிகளுக்கு எமது பூரண ஆதரவையும் பங்களிப்பினையும் வழங்க வேண்டும். சும்மா இருந்து கொண்டு அரசாங்கத்தை ஏசுவதில் எதுவித பயனுமில்லை. இந்த பூமி வளம் மிக்கது.

எனவே நாம் பயிரிடுவோம் நாட்டை சீர் படுத்துகின்ற ஒரு பரம்பரையாக மாறுவோம் என்றும் தெரிவித்தார். (ஓ-4)

# இன்று ஒரு தகவல்

## மகாபாரதப் போரில் தர்மர்

மகாபாரதப் போர் நடைபெற இருக்கிறது. போர் ஆரம்பிக்கும் சமயத்தில் அர்ஜுனன் "போர் செய்ய மாட்டேன்" என்கிறான்.

அதனால் கண்ணன், அர்ஜுனனுக்கு கீதையை உபதேசம் செய்கிறார்.

'சரி, இனிமேல் யுத்தம் ஆரம்பமாகிவிடும்' என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்த சமயத்தில் தர்மபுத்திரர் என்ன செய்தார் தெரியுமா?

தன்னுடைய கவசத்தையும், ஆயுதங்களையும் கழற்றி வைத்துவிட்டு பீஷ்மரை நோக்கி நடந்து செல்கிறார்.

'தர்மர் ஏன் அங்கே போகிறார்?' என்று யாருக்கும் புரியவில்லை.

இருந்தாலும் தர்மரின் சகோதரர்களும் ஸ்ரீ கிருஷ்ணனும் அவரின் பின்னால் செல்கின்றனர். தர்மர் நேராக பீஷ்மரின் முன்னால் போய் நின்று நான் உங்களை எதிர்த்துப் போர் செய்ய வேண்டும். அதற்குத் தங்களுடைய ஆசீர்வாதம் வேண்டும்" என்று கேட்கிறார். இவர் இப்படிக் கேட்டதும் பீஷ்மர் சந்தோஷப்பட்டார்.

"நீ என்னுடைய ஆசியைப் பெறாமல் யுத்தத்தை ஆரம்பித்திருந்தால் 'நீ தோற்றுப் போக வேண்டும் என்று நான் உன்னைச் சபித்திருப்பேன். ஆனால் இப்போது நீ என் ஆசியைப் பெற்றதால் நீதான் வெற்றியடைவாய்" என்று சொல்லிவிட்டு பீஷ்மர், "இன்னும் உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்கிறார். அப்போதுதான் தர்மர், "தங்களைக் கொல்வதற்கு என்ன வழி?" என்று வினவுகிறார்.

அதற்குப் பீஷ்மர், "பிறகு வா சொல்கிறேன்", என்கிறார்.

சொன்னது போலவே பீஷ்மர் தன்னைக் கொல்லும் வழியையும் தர்மருக்குக் கூறுகிறார். அதன் பின் தர்மர் துரோணாச் சாரியாரின் ஆசியைப் பெறுகிறார். துரோணர் என்ன சொன்னார் தெரியுமா?

"எங்கே தர்மம் இருக்கிறதோ அங்கே ஸ்ரீ கிருஷ்ணன் இருப்பார். எங்கே ஸ்ரீகிருஷ்ணன் இருக்கிறாரோ அங்குதான் வெற்றி" என்கிறார்.

அவரும் தன்னை எப்படிக் கொல்வது என்ற விபரத்தை தர்மருக்குச் சொல்லிக் கொடுக்கிறார். அதன் பின்னர் தர்மர் கிருபாச்சாரியாரிடம் சென்று "உங்கள் ஆசி வேண்டும்" என்கிறார். கிருபாச்சாரியாரும் தர்மரை ஆசீர்வதித்தார்.

அதன்பின் தர்மர், உங்களை எப்படிக் கொல்வது?" என்று கிருபாச்சாரியாரிடம் கேட்க விரும்புகிறார். ஆனால் தர்மரின் வாயிலிருந்து அந்த வார்த்தைகள் வெளிவரவில்லை.

இதைப் புரிந்து கொண்ட கிருபாச்சாரியார், "என்னை யாராலும் வெல்ல முடியாது. ஆனால் உனக்குத் தான் வெற்றி" என்கிறார்.

இந்த மூன்று பேரும் என்ன சொல்கிறார்கள் என்றால்... "செஞ்சோற்றுக் கடனுக்காக நாங்கள் துரியோதனனின் பக்கம் தான் இருந்து போர் செய்ய வேண்டும். ஆனாலும் எங்கள் ஆசிகள் உனக்குத் தான்" என்கிறார்கள்.

தர்மர் கடைசியாக மாமா சல்லியனிடம் சென்றார். சல்லியனிடம் ஆசீர்வாதமும் பெற்றார்.

பின்னர் அவரிடம் ஒரு வேண்டுகோளையும் விடுத்தார். அதாவது, "கர்ணன் – அர்ஜுனனுடன் போர் செய்யும் ஒரு நேரம் வரும். அந்தச் சமயத்தில் கர்ணனுடைய உற்சாகத்தைக் குறைக்க வேண்டும்" என்று வேண்டிக் கொள்கிறார்.

எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்றாலும் பெரியவர்களின் ஆசீர்வாதம் பெற்றுத்தான் ஆரம்பிக்க வேண்டுமாம்.

அதைத்தான் தர்மர் செய்தார். அதனால் தான் வெற்றியும் பெற்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## கல்வி நிர்வாக சேவையில்

# பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் புதிய நிலையங்களில் கடமையேற்க வேண்டும்

## கல்வியமைச்சின் மேலதிக செயலாளர்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்களை புதிய சேவை நிலையங்களுக்கு நியமிக்கும் பணி இடம்பெறவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 196 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கே. முஹம்மட் தம்பி தெரிவித்தார். இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பிற்கு நாடளாவிய ரீதியில் 300 பேர் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வாரம் வழங்கி வைத்தார்.

பதவி உயர்வு பெற்றவர்களில் 105 பேர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள். ஏனைய 196 பேர் தற்போது சேவையிலுள்ளவர்கள். இவர்களைக் கொண்டே வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்கள் புதிய சேவை நிலையங்களில் கடமையேற்க வேண்டுமென்பதில் கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த உறுதியாகவுள்ளார் எனவும் அவர் மேலும் விளக்கினார்.

இத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை வலயக் கல்வி அலுவலகங்களில் புதிய வலயக் கல்வி அலுவலகங்களில் பதிய வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கடமையேற்கவுள்ளனர்.

பிரஸ்தாப மூன்று கல்வி வலயங்களிலுமுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள், இ.த.நி.சே. முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஓ-4)

# கல்வி, சுகாதாரம் – இருதுறைகளும் சமுதாயத்திற்கு இன்றியமையாதவை

## அமைச்சர் பேசல ஜயரத்ன

(கொழும்பு)

கல்வித்துறையும், சுகாதாரத் துறையும் சமூகத்துக்கு இன்றியமையாத இரு துறைகளாகும். இவ்விரண்டு துறைகளும் சிறப்பாக இல்லாவிடின் சமூகத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது என வடமத்திய மாகாண சுகாதார, சுதேச வைத்திய, இளைஞர், விளையாட்டு, சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் பேசல ஜயரத்ன தெரிவித்தார்.

கல்நேவ வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவின் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரு சமூகத்தில் கல்வி கற்றவர்கள் இருப்பது போலவே தேகாரோக்கியமுடையவர்களும் இருக்க வேண்டும். எனவே தான் அரசாங்கம் கல்வி, சுகாதாரம் ஆகிய இரு துறைகளுக்கும் பாரிய தொகைப் பணத்தை செலவிட்டு வருகிறது.

கடந்த 30 வருடங்களாக யுத்தம் இடம்பெற்று வந்தமையால் அதற்குப் பெருமளவு பணத்தைச் செலவிட வேண்டி இருந்தது. இன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் யுத்தத்தை முடித்து சுதந்திரமாக வாய் திறந்து மூச்சுவிடக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்துள்ளார்.

எதிர்வரும் வருடங்களில் சுகாதாரத்துறைக்கு அரசாங்கம் பெருமளவு பணத்தை ஒதுக்கீடு செய்யவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-4)



மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராக் கல்வித்திட்ட இணைப்பாளர் இ. சிவரூபன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வித்தியாலய அதிபர் செ. பேரின்பநாதன் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

18.11.2009
(கார்த்திகை 02 புதன்கிழமை)
துதியை பின்னிரவு 2.31 மணிவரை
அனுசம் முற்பகல் 7.57 மணிவரை
இராகுகாலம் 12.08-1.38 மணிவரை
சுபநேரம் 4.38-6.08 மணிவரை
அமிர்தசித்தம்

| | |
|---|---|
| மேடம் | பெரியோர் மனஸ்தாபம், ஆரோக்கியக்குறைவு, போசன சுகம், தனவிரயம். |
| இடபம் | மனோ தைரியம், செல்வாக்கு, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | தன்னம்பிக்கை, முயற்சி கைகூடும், நோய் குணமடைதல், பகைவர் நேசம். |
| கடகம் | பணக்குறைவு, அஜீரணக் கோளாறு, வியாபார சிந்தை, மரியாதைக்குறைவு. |
| சிங்கம் | உறவினர் மனஸ்தாபம், சுபசெலவு, வாகன சுகம், முயற்சி தாமதம். |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், நற்கீர்த்தி, பிரயாண நன்மை, தனலாபம். |
| துலாம் | மனோசங்கடம், ரோகநிலை, முயற்சி தாமதம், தனவிரயம். |
| விருச்சிகம் | வெகுமானம், போசன சுகம், மாதர் நட்பு, நல்ல முயற்சி. |
| தனுசு | பிறருக்கு உதவுதல், மனச்சோர்வு, காரிய அலைச்சல், சுபசெலவு. |
| மகரம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப சுகம், பெருமையடைதல், போசன சுகம். |
| கும்பம் | நிலைமாற்றம், காரிய நன்மை, நண்பர்கள் சந்திப்பு, தொழில் மேன்மை. |
| மீனம் | வீண்பயம், பிரயாணம், அதிக செலவு, கட்டுப்பாடு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 85 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 80 |
| தக்காளி | 75 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 60 |
| கரட் | 70 | 80 | 80 |
| பூசணி | 15 | 30 | 30 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 75 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 40 | 40 | 80 |
| பயிற்றங்காய் | 90 | 120 | 140 |
| லீக்ஸ் | 120 | 160 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 100 |
| கீரை – 1 பிடி | 25 | 30 | 25 |
| தேசிக்காய் | 170 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# கார்த்திகை மாதப் பலன்கள்



## மிதுனம்

**(மிருகசீரிடம் 3 , 4ஆம் பாதங்கள், திருவாதிரை , புனர்பூசம் 1,2,3 பாதங்கள் வரை)**

**வேகத்தோடு, விவேகமும் சேர்ந்து செயலாற்றும் மிதுனராசி நேயர்களே!**

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்ம கேது சிறு சிறு பிரச்சினைகளைக் கொடுத்தாலும் குருவின் பார்வை குடும்பஸ்தானம் வாக்குஸ்தானம் எனப்படும் இரண்டாம் இடத்தில் பதிவதால் மலை போல் வந்த துயர் பனி போல் விலகும்.

மக்கள் செல்வாக்கும் மேலோங்கும். உதிரி வருமானங்களைச் சேமிக்க இயலாது என்பதால் அதைச் சுப விரயமாக மாற்றிக் கொள்வது நல்லது.

குறிப்பாக ராசி நாதன் புதன் தனாதிபதி மற்றும் சகாய ஸ்தானாதிபதியுடன் கூடி இம்மாதம் தொடங்குவதால் சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பான பலன் தரும் மாதமாகவே கருதலாம்.

சேமிப்பு கரைந்தாலும் வரவும் அதிகரிக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும். தொழில் வளர்ச்சிக்கு புதிய யுத்திகளை கையாள்வீர்கள். சனி 4 இல் இருப்பதால் அர்த்தாஷ்டமச் சனி ஆதிக்கம் உருவாகிறது. எனவே ஒரு முறைக்கு இரு முறை எதையும் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும்.

அதே நேரத்தில் சனி பிடிக்காத தெய்வம் என்று வர்ணிக்கப்படும் அனுமனைத் தொடர்ந்து வழிபட்டால் சனியின் பாதிப்பில் இருந்து விடுபட வழி பிறக்கும். அதேபோல ஜென்ம கேது சப்தம ராகு நல்ல பலன்களைத் அள்ளி வழங்க முறையாக சர்ப்ப சாந்திகளைச் செய்துகொள்ள வேண்டும். பகைகளில் பாம்புப்பகை மட்டும் கடுமையான பகையாகும். தேம்பும் வாழ்க்கையை அது கொடுக்காமல் செல்வ வளத்தை அது கொடுக்க வேண்டுமானால் ஜென்மத்தில் கேது சஞ்சரிக்கும் போது சர்ப்ப ஸ்தலவழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

நவம்பர் 27ஆம் திகதி தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். சப்தஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராசி நாதன் புதன் தன் வீட்டை தானே பார்ப்பதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். மாமன் மைத்துனர் வழி ஒத்துழைப்போடு மங்கல நிகழ்ச்சி ஒன்றை நடத்தி வைப்பீர்கள். குடும்பத்தில் உள்ள கருத்துவேறுபாடுகள் அகலும். பிரிந்து சென்றவர்கள் வந்து இணைவர். பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட பகை மாறும்.

நவம்பர் 28ஆம் திகதி விருச்சிக ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார். 5 , 18க்கு அதிபதியான சுக்கிரன் 6இல் சஞ்சரித்து 12ஆம் இடத்தைப் பார்க்கும் பொழுது ஒரு சில நல்ல சம்பவங்கள் நடைபெறப் போகின்றன. திட்டமிடாது செய்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். செல்வ நிலையை உயர்த்திக்கொள்வதற்காக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும்.

குருப்பெயர்ச்சி தான் உங்கள் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை உருவாக்கப் போகிறது. நல்ல வாய்ப்புகளை இல்லம் தேடி வர வழைப்பது குரு பார்வை ஒன்று தான். அந்த நேரம் டிசம்பர் 15 ஆம் திகதி முதல் வருகிறது.

எனவே அதன் பிறகு ராஜயோகம் உங்களை தேடி வரப்போகிறது. ஆசைப்பட்டவைகளை வாங்கி மகிழும் வாய்ப்புகிட்டும். அரசியல் வாதிகளாலும் அனுகூலம் கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும் நேரம் இது. இம்மாதம் ஜென்ம கேதுவால் நன்மைகள் நடக்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடிய வும் வலம்புரி விநாயகரை வழிபட்டு வாருங் கள்.



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம் , பூசம் ஆயிலியம் முடிய)**

**சமார்த்தியமாகப் பேசி சமாளிக்கும் ஆற்றலைப்பெற்ற கடகராசி நேயர்களே!**

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசி நாதன் சந்திரன் செவ்வாய் வீட்டிலும் செவ்வாய் சந்திரன் வீட்டிலும் ,சஞ்சரித்து பரிவர்த்தனை யோகத்தோடு இம்மாதம் தொடங்குவதால் பணப்புழக்கத்திற்கு குறைவு இருக்காது. பக்க பலமாக இருக்கும் நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். இனத்தார் பகை மாறும். ஏற்றுக்கொண்ட பணியை செவ்வனே செய்து முடிப்பீர்கள்.

ராசியில் சஞ்சரிக்கும் செவ்வாய் நீச்சம் பெற்றுள்ளதோடு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவும் நீச்சம் பெற்று ஒன்றையொன்று பார்த்துக்கொள்வதால் நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள்.

நீடித்த நோயில் இருந்து நிவாரணம் பெறும் வாய்ப்புக்கிட்டும். நட்பு வட்டம் விரியும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். 6ஆம் இடத்தில் உள்ள ராகு அற்புதப் பலன்களை வழங்கினாலும் 12ஆம் இடத்தில் உள்ள கேது பலவித பிரச்சினைகளையும் கொடுக்கக் காரணமாக இருப்பர்.

எனவே சர்ப்ப ஸ்தலங்களுக்குச் சென்று முறையாக சர்ப்ப சாந்திகளைச் செய்து நல்லது. இம்மாத கடைசியில் அஷ்டமத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால் ஒரு சிலர் திடீர் இடமாற்றம் ,ஊர் மாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக இருக்க வளர்ச்சி தரும் குருவை வழிபட்டால் பலப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

நவம்பர் 27ஆம் திகதி தனுசு ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 12 மற்றும் 3 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோகம் செயற்படும். எனவே திட்டமிடாது செய்த காரியங்களை வெற்றி பெறும் திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்போடு செல்வ நிலையை உயர்த்திக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உயர் பதவி கிடைக்கும். உடன் இருப்பவர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். கடன் சுமை குறை யும். கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

நவம்பர் 28 ஆம் திகதி விருச்சிக ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கப் போகிறார்.. இதன் விளைவாக குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் கைகூடும். சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர் பணத்தேவைகள் பூர்த்தியாகும். பகல் இரவாக பாடுபட்டதற்கு ஏற்ப

**சிவல்புரி சிங்காரம்**

பலன் கிடைக்கும் நேரம் இது.

டிசம்பர் 15ஆம் திகதி குருசஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் கனவுகளை நனவாக்க வேண்டுமானால் கைகூப்பித் தொழுது வழிபட வேண்டும். இனத்தாரையும் இல்லத்தில் இருப்பவர்களையும் அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை அடைய முடியும்.

ஊர் மாற்றமும் உத்தியோக மாற்றமும் வருவதை யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. வாகன பழுதுச் செலவுகள் அதிகரிக் கும். வளர்ச்சி கூட அனைத்து வழிகளிலும் மாற்றங்களைச் செய்வது நல்லது.

இம்மாதம் குடும்பத்தில் வரப்போகும் குருவால் இன்பங்கள் வந்து சேர வியாழன் விரதமும் தென்முகக் கடவுள் வழிபாடும் செய்து வருவது நல்லது. குருவை வழிபட்டால் குழப்பங்கள் தீரும். (தொடரும்)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளின் 30.09.2008 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ் ஸ்ரான்லி வீதி-030 | | மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை -030 |
| 2 | சேவை நிலையம், மானிப்பாய்-837 | 05.12.2009 | |
| 3 | காங்கேசன்துறை - 031 | | |
| 4 | பருத்தித்துறை-285 | 06.12.2009 | |
| 5 | யாழ். பிரதான வீதி-104 | | |
| 6 | சேவை நிலையம், உரும்பிராய்-865 | 07.12.2009 | |
| 7 | நெல்லியடி-106 | | |
| 8 | அச்சுவேலி-107 | | |
| 9 | சங்கானை-108 | 08.12.2009 | |
| 10 | சுன்னாகம்-109 | 09.12.2009 | |
| 11 | சாவகச்சேரி-110 | | |
| 12 | சேவை நிலையம், கொடிகாமம்-904 | 10.12.2009 | |
| 13 | வல்வெட்டித்துறை-141 | | |
| 14 | யாழ். பல்கலைக்கழகம்-162 | | |
| 15 | சேவை நிலையம்,திருநெல்வேலி-855 | 11.12.2009 | |
| 16 | யாழ். கன்னாதிட்டி -284 | | |
| 17 | சேவை நிலையம், இணுவில்-905 | 12.12.2009 | |
| 18 | சேவை நிலையம், மல்லாகம்-899 | 13.12.2009 | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிரதேச முகாமையாளர்

மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3732)


## தொழிற்சங்க நடவடிக்கைகளால் விமான சேவையில் எதுவித பாதிப்பும் இல்லை


### விமானசேவைகள் அமைச்சின் செயலாளர்

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக இலங்கை விமானச் சேவைக்கு எந்தப் பாதிப்பும் இதுவரை ஏற்படவில்லை என்று விமானச் சேவைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சின் செயலாளர் றஞ்சித் டி சில்வா தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் தொழிற்சங்கங்கள் தொழில் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதனால் விமான சேவைக்கு ஏதாவது பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளனவா? என்று குறித்த ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த விமான சேவைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சின் செயலாளர் தற்போதைய நிலைமையில் இலங்கை விமான சேவை எந்தப் பாதிப்பும் இன்றி சுமூகமாக இடம்பெற்று வருகின்றமை இதுவரை எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறினார். (ஓ-4)



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான மத்தியஸ்தர் சபை அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும் மத்திய சபை உறுப்பினர்களையும் படத்தில் காணலாம்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
- பாரதியார்

வலம்புரி

# தொண்டர் ஆசிரியர் தம் பெருமை சொல்லவும் வேண்டுமோ!

தொண்டர் ஆசிரியர்களின் மனக்கவலை மாற்றப்பட்டுள்ளது. மகஜர்கள், மறியல் போராட்டங்கள் என்ற பல களங்கள் கடந்து நிம்மதியான-நிறைவான ஆசிரியர் பதவியை அவர்கள் பெற்றுள்ளனர்.

தொண்டர் ஆசிரியர்களின் மனக்கவலையை ஆற்றுவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணி காத்திரமானது.

'ஆசிரிய உதவியாளர்' என்ற வகுதியை உருவாக்கி தொண்டர் ஆசிரியர்களை உள்வாங்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் புதிய திட்டத்தால் பல குடும்பங்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றன என்ற உண்மையையும் இவ் விடத்தில் சுட்டிக்காட்டுவது முக்கியமானது.

அதே நேரம் தொண்டர் ஆசிரியர்களின் பணி தொடர்பில் இரு கால கட்டங்கள் உண்டு. அதில் ஒன்று அவர்கள் தொண்டர் ஆசிரியர்களாக இருந்த போது ஆற்றிய பணி.

மற்றையது 'ஆசிரிய உதவியாளர்' பதவி கிடைத்த பின்னான பணி.

வட பகுதியின் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை மிக மோசமாக இருந்தபோது பல பாடசாலைகள் தொண்டர் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையால் மிக சிறப்பாக செயற்பட்டன.

ஊதியக் கொடுப்பனவு எதுவுமின்றி அல்லது மிகக் குறைந்த ஊதியத்துடன் அவர்கள் ஆற்றிய பணி மறப்பதற்கு உரியதல்ல.

அதே நேரம் தற்போது ஆசிரிய உதவியாளர்களாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டவர்களின் கைகளில் பாரிய பணி உண்டு.

எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுப்பது முதல் வன்னிப் பகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் அவலங்களை சந்தித்து மீண்டு வந்துள்ள மாணவ செல்வங்கள் இழுந்த கல்வியை ஈடு செய்வது வரையான பணிகளில் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து ஆசிரிய உதவியாளர் பதவியைப் பெற்றுக் கொண்டவர்கள் தங்களை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்த வேண்டும்.

தொண்டர் ஆசிரியர்களாக இருந்து ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கப்பட்டு விட்டோம். இனி அர்ப்பணிப்பு தேவையில்லை என்ற மன நிலை மருந்துக்கும் ஆகாது.

ஆசிரியப் பணி புனிதமானது. அது மற்றவர்களை திருப்திப்படுத்துவதற்காகச் செய்யும் பணியல்ல, அந்த பணியால் இறைவனைப் திருப்திப்படுத்த வேண்டும். அதற்கு எங்கள் மனசாட்சிகளே ஆதாரங்கள் ஆகும்.

இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் 'ஆசிரியப் பணி கிடைப்பது பாக்கியம்' என்கின்றார்.

அவரின் வார்த்தைகளை ஆசிரிய உதவியாளர்களாக 'நியமனம் பெற்றுக் கொண்ட உங்களுக்கு எங்கள் அன்பளிப்புகளாக தருகின்றோம்.

ஏற்றிடுவீர்-கல்வியால் உங்களையும் உயர்த்துங்கள். மாணவர்களையும் உயர்த்துங்கள். எல்லாம் இன்பமயமாகும்.

# புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வுக்கு 20 நிலையங்கள் நிறுவப்படவுள்ளன

## புனர்வாழ்வு ஆணையாளர் தகவல்

பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்த மற்றும் மனிதாபிமான நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கென 20 புனர்வாழ்வு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் தேசிய அபிவிருத்தி தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட பணிப்பின் பேரில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் நிறுவப்படவுள்ள இப் புனர்வாழ்வு நிலையங்களில் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 10 ஆயிரம் பேருக்கு புனர்வாழ்வு வழங்கப்படவுள்ளது.

இதன்முதற் கட்டமாக வவுனியா மெனிக்பாம் பகுதியில் 10 நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இம்மாதம் இவை அமைக்கப்படுவதுடன் மேலும் 10 அடுத்த மாதம் அமைக்கப் படவுள்ளன.

எவ்வாறாயினும் இவர்கள் அனைவரும் உரிய முறையில் புனர்வாழ்வு அளிக்கும் திட்டம் ஜனவரி முதல் ஆரம்பமாகவுள்ளதுடன் ஒருவருட காலத்துக்குள் அதனைப் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப புனர்வாழ்வுக்கான காலத்தை நீடிப்பது குறித்து முடிவெடுக்கப்படும்.

புனர்வாழ்வு அளிக்கப்பட உள்ளவர்களுள் 1854 பெண் உறுப்பினர்களும் 566 மாணவர்களும் அடங்குகின்றனர். பாடசாலை செல்லும் வயதுடைய மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

கல்வியைத் தொடரத் தகுதியான 273 மாணவர்கள் இலங்கையிலேயே மிகவும் பிரபல்யம் வாய்ந்த இரத்மலானை இந்துக் கல்லூரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் மிகவும் ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த மாணவர்களுக்கான சகல வசதிகளையும் செய்து கொடுக்க 35 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதென தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4)

# புற்று நோயாளர்களுக்கு அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு

(பொன்னாலை)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் அனுசரணையில் வலி. வடக்குப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட புற்று நோயாளர்களுக்கான அன்பளிப்பு வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சம்மேளனத் தலைவர் க.புஷ்பராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை புற்று நோய் வைத்தியப் பிரிவின் எலும்பு வைத்திய நிபுணர் எஸ். ஜெயக்குமார், வலி.வடக்கு பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன், தெல்லிப்பழைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்.கைலாசநாதன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி நிகழ்வில் புற்று நோயாளர்களுக்கு அன்பளிப்பு வழங்குவதற்கு உதவி யவர்களையும் பாடசாலைகளின் அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-49)

# இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ராஜீவ்-ஜெயவர்த்தனா ஒப்பந்தம்தான் தீர்வு

## விசுவ இந்துபரிஷத்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு, ராஜீவ்- ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதுதான் ஒரே தீர்வாக இருக்கும் என்று விசுவ இந்து பரிஷத் தலைவர் பிரவீன் தொகாடியா கூறினார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய விசுவ இந்து பரிஷத்தின் அகில உலக பொதுச் செயலாளர் பிரவீன் தொகாடியா, இலங்கைப் பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகள் சரியாக செயல்படவில்லை. இதற்கு விசுவ இந்து பரிஷத் கடும் கண்டனம் தெரிவிக்கிறது. 1987 இல் கொண்டு வந்த ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை இலங்கை அரசு இதுவரை அமுல் படுத்தவில்லை. இது பற்றி மத்திய அரசும் வலியுறுத்தவில்லை.

விடுதலைப் புலிகள் பிரச்சினை என்பது வேறு விடயம். தற்போது இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு முறையான நிவாரணமும் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை சென்று திரும்பிய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இதை வலியுறுத்தாதது ஏன் என்று தெரியவில்லை. பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவி செய்ய தொண்டு நிறுவனங்களை இலங்கை அரசு அனுமதிக்காதது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

இது குறித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி உள்ளோம். இலங்கை தமிழர் பிரச்சினைக்கு ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை உடனே அமுல் படுத்துவது தான் சரியான தீர்வாக இருக்க முடியும் என்றார். (ஓ-4)

# அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோரிய ஆறு சிங்களவர்கள் நாடு கடத்தல்

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரிய 6 சிங்கள மீனவர்களை அந்நாட்டு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் நாடு கடத்தியுள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி குழப்பம் விளைவித்த குறித்த 6 மீனவர்களும் நேற்றைய தினம் விஷேட விமானம் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மீனவர்கள் பிரச்சினைகளை ஏற்படுத்தாத வகையில் 17அவுஸ்திரேலிய பொலிஸ் அதிகாரிகளும்,சில குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளும் விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி படகு மூலம் 50 பேர் அவுஸ்திரேலியாவைச் சென்றடைந்த குழுவில் குறித்த 6 சிங்கள மீனவர்களும் அடங்குவ தாக தெரிவிக்கப்படுகிறது.இவர்களில் 17பேருக்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# கராத்தே போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் வருடாந்த உள்ளகராத்தே போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை யாழ்.பல்கலைக்கழக விளை யாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக கராத்தே குழுவின் முகாமையாளரும் பௌதீகவியற் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான டாக்டர் என். சிவயோகன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி பிரிவுப் பணிப்பாளர் கே.கணேசநாதன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ)

# நலன்புரி நிலைய மக்களின் பிரச்சினைகளை கண்டறிவதற்கு 103 அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

வடக்கு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் பிரச்சினை களை கண்டறிவதற்கு 103 அரசாங்க அதி காரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பில் குறித்த அரசாங்கம் அதிகாரிகள் தகவல்களை திரட்டவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் குடி யேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீனினால் குறித்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஓ-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



உன்னுடைய குறிக்கோளை அடைவதற்கு நீ ஏன் முயற்சி செய்யக்கூடாது ? தோல்வியின் மூலம் மேலும் நாம் புத்திசாலிகளாகிறோம். காலம் எல்லையற்றது. இதோ இந்தச் சுவரைப் பார். இந்தச் சுவார் எப்போதாயினும் பொய் பேசியிருக்கிறதா? ஆனாலும் அது எப்போதும் ஒரு சுவராகத்தான் இருந்து கொண்டு இருக்கிறது. மனிதன் பொய் பேசுகிறான் - ஆனால் அவனே பிறகு ஒரு தெய்வமாகவும் ஆகி விடுகிறான். ஏதாயினும் ஒன்றைச் செய்துகொண்டிருப்பது மேல் அது தவறாகவே இருந்தாலும் கூட அதை நீ பொருட்படுத்தவேண்டியதில்லை. ஒன்றுமே செய்யாமல் இருப்பதை விட அது எவ்வள்வோ மேலானது. பசு ஒரு போதும் பொய் சொல்வதில்லை. ஆயினும் காலம் எல்லாம் அது ஒரு பசுவாகத்தான் இருக்கிறது. ஏதாவது ஒன்றைச் செய்!

# இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் சித்திரவதை

## இந்திய தமிழ் அகதியாக அறிவிக்கக் கோரிக்கை

(சென்னை)

இலங்கை கடற்படையால் சித்திர வதைப்படும் மீனவர்களை இந்திய தமிழ் அகதியாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என தமிழ் நாடு மீனவர் பேரவை தலைவர் அன்பழகன் கடந்த திங்கட்கிழமை இரவு இராமேஸ்வரத்தில் தெரிவித்தார்.

மேலும் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சித்திரவதை செய்கின்றனர். இறால் மீன்கள் கொள்ளையிடுகின்றனர். படகுகளை சேதப்படுத்தி வருவதால் மீனவர்களுக்கு மன உழைச்சல் ஏற்பட்டு சுமார் 60 சதவீதம் பேர் மீன் பிடிக்கச் செல்வதில்லை.

இலங்கை சென்ற மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி இலங்கைத் தமிழர் , தமிழக மீனவர்களைப் பற்றி எதுவும் பேசவில்லை. தமிழக மீனவர்களை மத்திய அரசு இரண்டாம் தர குடிமகனாகக் கருதுகிறது.

மீனவர்களை பாதுகாக்க தவறிய மத்திய அரசைக் கண்டித்து நேற்று இதற்கு மேலான வாகனத்தில் பேரணியாகப் புறப்பட்டு 21ஆம் திகதி சனிக்கிழமை உலக மீனவ தினத்தை கறுப்பு தினமாக அறிவித்து தமிழக முதல்வரிடம் கோரிக்கை மனு கொடுப்பது என்றும் இதன் பின்னர் நடவடிக்கை எடுக்கவில்லை எனின் தமிழக மீனவர்களை இந்திய அகதியாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். பின்னர் புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப் பட்டினம் கடற்கரையில் இருந்து ஆயிரம் படகுகளில் ஆயுதமின்றி இலங்கை நோக்கி படையெடுப்புப் போராட்டம் நடத்தவுள்ளோம் என்றும் தெரிவித்தார். (ஓ-4)

# வவுனியாப் பகுதியில் புனர் நிர்மாணப் பணிகளுக்கு 250 மில். டொலர் நிதியுதவி

(கொழும்பு)

வவுனியாப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் குடியேற்றம் மற்றும் புனர் நிர்மாணப்பணிகளை துரிதப்படுத்த உலகஸ்தாபனங்கள் மற்றும் ஜப்பான் அரசாங்கம் மேலும் 250 மில்லியன் டொலரை நிதி உதவியாக வழங்க முன் வந்துள்ளன.

குறிப்பிட்ட ஸ்தாபனங்களும் ஜப்பான் அரசாங்கமும் இவ்வருட இறுதிக்குள் இந்தத் தொகையை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் சார்ள்ஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் 6 மாத காலத்திற்குள் மீள் குடியேற்றம் மற்றும் புனர் நிர்மாணப் பணிகளைப் துரிதப்படுத்தும் நோக்கில் இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஜப்பான் அரசாங்கத்துடன் உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன இவ்வாறு நிதி உதவி வழங்க முன் வந்துள்ளன. (ஓ-4)

# இலங்கைத் தமிழர்களை மீட்கக் கோரி ஆர்ப்பாட்டம்

(நாமக்கல்)

வதைமுகாம்களில் இருந்து இலங்கைத் தமிழர்களை மீட்க வலியுறுத்தி நாமக்கல்லில் புதிய ஜனநாயக தொழிலாளர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி சார்பில் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நாமக்கல் அண்ணா சிலை அருகே நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் தனராஜ் தலைமை வகித்தார். எம்.ஆர். அசோகன், சத்தியா உள்ளிட்ட நிர்வாகிகள் கோரிக்கைகளை விளக்கிப்பேசினர்.

இலங்கை அரசால் வதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான தமிழர்களை மீண்டும் அவரவர் குடியிருப்பு பகுதிகளில் குடியமர்த்த வேண்டும்.

புதிய வாழ்க்கை துவங்க அனைத்து நிவாரண உதவிகளையும் வழங்க வேண்டும். இலங்கை அரசின் மெத்தனப் போக்கை உலக நாடுகள் கண்டிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன. இதில் 50 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். (ஓ-4)

# ஜெலட்டின் குச்சிகள் வெடித்ததில்

## 15 பேர் பலி 20 பேர் காயம்

### ஆந்திரத்தில் சம்பவம்

(குண்டூர்)

குண்டூர் மாவட்டத்தில் வீடு ஒன்றில் வைக்கப்பட்டிருந்த ஜெலட்டின் குச்சிகள் வெடித்ததில் 15 பேர் இறந்தனர். 20 பேர் காயமடைந்தனர்.

தாச்சபள்ளி மண்டலம் நாராயணபுரம் கிராமத்தில் வி.கோடீஸ்வரராவ் என்பவரின் வீட்டில் இந்த துயர சம்பவம் திங்கட்கிழமை நடந்தது .கல் உடைப்பு (குவாரி) பணிகளை நடத்தி வருபவர் கோடீஸ்வரராவ். அதற்காக தனது வீட்டில் இவர் ஜெலட்டின் குச்சிகளை இருப்பு வைத்திருந்தாராம்.

இந்நிலையில் வீட்டில் வைக்கப்பட்டிருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் தீப் பிடித்து வெடித்ததில் பரவிய தீ ஜெலட்டின் குச்சிகள் இருந்த இடத்திற்கும் பரவியதாம்.. அதனால் அந்தக் குச்சிகள் பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறின.

வீட்டின் அருகே இருந்த சுமார் 15 வீடுகளும் இந்த வெடி விபத்தில் தீப் பிடித்து சாம்பலாயினர் என்று காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரை 8 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. தரை மட்டமான வீட்டின் இடிபாடுகளில் இன்னும் சிலர் சிக்கியிருக்கக்கூடும் என்று பொலிஸார் அஞ்சுகின்றனர்.

காயமடைந்த வர்கள் குண்டூரில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்று காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-4)

# அக்கினி குண்டத்துக்குள் அமர்ந்து ஹோமம் செய்த தஞ்சை சாமியார்

கர்நாடக மாநிலம் குல்பர்கா அருகே உள்ள ஆன்மிக நகரான கனகபூரில் தத்தாத் ரேயா கோவில் உள்ளது. அங்கு அக்னி குண்டத்தில் ஹோமம் செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதைக் காண ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு இருந்தனர்.

தஞ்சாவூரைச் சேர்ந்த ராம்பாவு என்ற 35 வயது சாமியார் அக்னி குண்டத்துக்குள்ளேயே அமர்ந்து ஹோமம் செய்தார். அதைப் பார்த்த பக்தர்கள் கண்களை இமைக்க மறந்தனர். வேத மந்திரங்கள் முழங்க பக்திப் பாடல்கள் இசைக்க ராம்பாவு அக்னி குண்டத்துக்குள் அமர்ந்து ஹோமத்தில் ஈடுபட்டார்.

அரை மணி நேரமாக இந்த அதிசயத்தை நிகழ்த்திய அவர் பிறகு அக்னி குண்டத்துக்குள் இருந்து வெளியே வந்தார். அனைவருக்கும் ஆச்சரியம் அளிக்கும் விதமாக அவரது உடம்பில் தீக்காயம் சிறிதும் இல்லை. இது பற்றி பக்தர்களிடையே அவர் உரையாற்றுகையில் ,தான் மக்களின் நலனுக்காக கடந்த 15 ஆண்டுகளாக நெருப்பில் அமர்ந்து ஹோமம் செய்து வருவதாக தெரிவித்தார். நாட்டு நலனுக்காக தொடர்ந்து இதுபோல செய்யப்போவதாகவும் கூறினார். நமது பக்தியால் கடவுளை திருப்திப்படுத்தினால்தான் அவர் நமக்கு வலிமையை அளிப்பார் என்றும் ராம்பாவு குறிப்பிட்டார். (ஓ-4)

# சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவிக்கும் செலான் டிக்கிரி சிறுவர் கணக்கு

சேமிப்புப் பழக்கத்தினை ஊக்குவித்து வெகுமதியளிப்பதில் செலான் டிக்கிரி சிறுவர் கணக்கு முன்னணி வாய்ந்ததுடன் புதுமை மிக்க ஊக்குவிப்புகளையும் பெறுமதி சேர்ப்புகளையும் வழங்குகிறது.



செலான் டிக்கிரி **கானிவல் செலான் டிக்கிரி டிஸ்னிலாண்ட் சவாரி** மற்றும் **டிக்கிரி சிங்கப்பூர் சுற்றுலா** போன்ற செலான் வங்கியின் முன்னணி ஊக்குவிப்புகள் வெற்றிகரமாக அமைந்ததுடன் சிறுவர்கள் மத்தியில் பிர பல்யமும் அடைந்தது.

சிறுவர் சேமிப்பு கணக்குகளுக்கு மத்தியில் முன்னணி தன்மையினை பாதுகாக்கும் வகையில் செலான் டிக்கிரி இம்முறையும் புதுமையான ஊக்குவிப்பான செலான் டிக்கிரி மாமா வினை அறிமுகப்படுத்துகிறது.

அவர் மிகவும் சுவாரஸ்யமான கதாபாத்திரமாக திகழ்வார். வாழ்க்கையில் சிறந்தவற்றுடன் வளர்ச்சியடைவதை உறுதி செய்து சிறுவர் பிராயத்தை மகிழ்வூட்டும் சுவாரஸ் யமிக்க மாயைகள் செய்ய வல்லவர். அவர் குழந்தைகள் எதிர்பாராத தருணங்களில் மாயம் மூலம் அவர்களுக்கு அழகிய பரிசுகள் வழங்கி அவர்களை மகிழ்விக்க விரும்புபவர்.

சிறுவர்களை சேமிப்பதற்கு ஆர்வமூட்டும் வகையில் செலான் வங்கி முதன் முறையான டிக்கிரி பரிசுத்திட்டங்களை அறிமுகஞ் செய்தது. கோப்பைகள், வானொலி, பட்டரியில் இயங்கும் கார்கள், பொம்மைகள், டையமண்ட் பெண்டன்ஸ் கைக்கடிகாரம், டீ.வீ.டீ பிளேயர், எம்.பீ4 பிளேயர், இலத்திரனியல் ஓகன், டிஸ்க்மான் மற்றும் சிறு விளையாட்டுப் பொருட்கள் போன்ற பரிசுகளை வழங்குகிறது. டிக்கிரி சேமிப்பு கணக்கொன்றை நாடெங்கிலும் உள்ள வேண்டியதொரு செலான் வங்கிக் கிளையில் அல்லது நாடு முழுவதும் உள்ள 83 பாடசாலை சேமிப்பு நிலையங்களில் ஆரம்பிக்க முடியும்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் குழந்தைக்கு செலான் டிக்கிரி கணக்கொன்றை ஆரம்பித்து இவ்வழகிய பரிசுகளை பெறுவதே. உங்கள் குழந்தைக்கு ஏற்கனவே செலான் டிக்கிரி கணக்கொன்று இருப்பின் உங்கள் கணக்கு மீதியினை அடுத்த தரத்திற்கு அதிகரித்து அதற்குரிய பெறுமதியான பரிசுகளை பெறுவதே.

இப் பெறுமதியான பரிசுகளுக்கு மேலதிகமாக வட்டி நாளாந்தரீதியில் கணக்கிடப்பட்டு உங்கள் கணக்கில் மாதாந்தம் வரபு வைக்கப்படும்.

உங்களுக்கு செலான் டிக்கிரி கணக்கொன்று இருப்பின் பரிசுக் குவியலை பெறுவீர்கள். உங்களின் கணக்கு மீதி குறிப்பிட்ட தரத்தினை அடையும் போது உங்கள் பரிசை நீங்களே தெரிவு செய்யலாம். (ஒவ்வொரு தரத்திலும் தெரிவு செய்ய 3 பரிசுகள் உள்ளன.)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



## மகாதேவன் ரவிசங்கர் (HNDA )

04.11.2009 கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 6ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் HNDA பட்டத்தைப் பெற்ற ம.ரவிசங்கரை மேலும் பல பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.


**பாராட்டி வாழ்த்துவோர்**

**இனிய நண்பர்கள்**

**கே.கே.தாஸன் ,ரி.ஆர். தயாகரன் , எஸ்.காண்டீபன் , ரீ.செந்தூரன்.**

3939

# டில்சான் சதம், இலங்கை பலம் இந்தியா முதல் இன்னிங்ஸில் 426



திலகரட்ன டில்சானின் சிறப்பான சதத்தின் மூலம் இலங்கை அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுகளையிழந்து 275 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3டெஸ்ட்,2 இருபது-20 மற்றும் 5 ஒரு நாள்போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் அகமதாபாத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகளையிழந்து 385 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 426 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுகளையுமிழந்தது.

இதில் ராகுல் டிராவிட் 261 பந்துகளில்(26 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 177 ஓட்டங்களையும், அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி 110 ஓட்டங்களையும், யுவராஜ் சிங் 68 ஓட்டங்களையும், ஹர்பஜன் சிங் 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வெலகெதர 4 விக்கெட்டுக்களையும், முரளிதரன் 3 விக்கெட்டுகளையும், பிரசாத் 2 விக்கெட்டுகளையும், கேரத் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு டில்சான்-பரணவித்தான ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி 16.5 ஓவர்களில் முதலாவது விக்கெட்டுக்காக 74 ஓட்டங்களை எடுத்த போது பரணவித்தான 55 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 35 ஓட்டங்களை எடுத்து இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் தோனியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் குமார் சங்கக்கார நிதானமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்த மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய டில்சான் 65 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் இலங்கை அணி வலுவான இலக்கை நோக்கி முன்னேறியது. இதில் அதிரடியாகத்துடுப்பெடுத்தாடிய திலகரட்ண டில்சான் 120 பந்துகளில் தனது 10வது சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார்.

எனினும் திலகரட்ண டில்சான் 133 பந்துகளில்(12 பவுண்டரிகள் அடங்கலாக) 112 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் பந்துவீச்சில் டிராவிட்டிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து மஹேல ஜெயவர்த்தனா களமிறங்க மறுமுனையில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 85 பந்துகளில்(3 பவுண்டரிகள் உட்பட)31 ஓட்டங்களை எடுத்து சகீர்கானின் பந்துவீச்சில் டெண்டுல்கரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 45.3 ஓவர்களில் 194 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுகளையிழந்தது.

இந்நிலையில் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஜெயவர்த்தனா, சமரவீர ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இலங்கை அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்சில் 3 விக்கெட்டுக்களையிழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மஹேல ஜெயவர்த்தனா 36, திலான் சமரவீர 45 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்துவீச்சில் சகீர்கான் 2 விக்கெட்டுக்களையும், இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## கொழும்பு வருவதை தடுக்க சோதனை

## அடிப்படை மனித உரிமைமீறல் மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றத்தால் அனுமதி

(கொழும்பு)

வடக்கிலிருந்து பொதுமக்கள் கொழும்பு வருவதை தடுக்கும் வகையிலான சோதனைகள் அவர்களது அடிப்படை உரிமைகளை மீறுவதாக கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை விசாரணை செய்ய உயர்நீதிமன்றம் நேற்று ஏற்றுக்கொண்ட்து.

இந்த மனுவை சட்டத்தரணியான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தாக்கல் செய்திருந்தார். அம்மனுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவ தளபதி, பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

வடக்கில் இருந்து மக்கள் தென் இலங்கைக்கு வருவதைத் தடுக்கும் ரீதியிலான பாதுகாப்புப் பிரிவினரின் செயல் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி சுட்டிக்காட்டனார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சுதந்திரமாக செல்ல அனுமதி வழங்கும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமை இச்செயலினால் மீறப்படுவதாக உயர்நீதிமன்றம் தெரிவித்தது.

இதன்படி வடக்கிலிருந்து தென் இலங்கைக்கு வரும் மக்களை சோதனை சாவடிகளில் அநாவசியமான முறையில் சோதனை செய்வதும் தென் இலங்கைக்கு வருவதை தடைசெய்யும் பாதுகாப்பு பிரிவினரின் செயல்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த விசாரணை மார்ச் மாதம் 12ஆம் திகதி நடத்த உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியது. (ச-5)

## பாதுகாப்பு அனுமதி...

பெற்றே பயணிக்க அனுமதி வழங்கப் பட்டது.

எனினும் கடந்த 13ஆம் திகதியிலிருந்து தென்பகுதியில் இருக்கும் மக்கள் யாழ்ப்பாணத்துக்கு வருவதற்கான பயணப் பாதுகாப்பு நடைமுறைகள் தளர்த்தப்பட்டன.

அவர்கள் வவுனியா ஈரப்பெரியகுளச் சோதனைச்சாவடியில் தமது அடையாள அட்டையின் நிழற்படபிரதி ஒன்றை கொடுத்து இராணுவ அதிகாரியின் கையொப்பத்தைப் பெற்று பயணிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதே நடைமுறையில் யாழ்ப்பாணத்திலிருந்து தேசிய அடையாள அட்டையின் மூன்று நிழற்பிரதிகளை சமர்ப்பித்து இன்று முதல் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

இதேவேளை யாழ். மாவட்டத்திலிருந்து வெளிச்செல்லும் பாரவூர்திகள் அனைத்தும் நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் தமது பதிவுகளை மேற் கொண்டபின்னர் வழமையான வாகனத் தொடரணியுடன் இணைந்து பயணத்தை மேற்கொள்ள முடியும் என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வெளிமாவட்டங்களுக்குப் பயணத்தை மேற் மேற்கொள்வதற்கு பயணப்பாதுகாப்பு அனுமதி தேவையா? இல்லையா? என்பது தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்ப நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில்;யாழ். அரச அதிபர் உரிய பதிலை அறி விக்க வேண்மென வலம்புரியில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சிறைக் கைதிகள் தாக்கப்...

ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன, ஐக்கிய சோசலிசக்கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய ஆகியோர் உட்பட வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் உறவினர்களும் கலந்து கொண்டனர்.

வருடக்கணக்கிலும் பலமாதங்களாகவும் தமிழ் அரசியல் கைதிகள் பலர் காரணம் எதுவுமின்றி குறித்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் தமிழ்க் கைதிகளில் சிலர் கடந்த வெள்ளிக்கிழமை சிறைச்சாலை அதி காரிகளினாலும் சிங்கள கைதிகளினாலும் கடுமையாக தாக்கப்பட்டனர்.

இதனை கண்டித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எதிராகவும் அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் கண்டித்து கோசங்கள் எழுப்பப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெற்றோர், உறவினர்கள், கருத்து தெரிவிக்கையில் தமது பிள்ளைகள், மற்றும் சகோதரர்கள் எது வித விசாரணையுமின்றி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் கைதிகளுக்கு உரிய முறையில் உணவுகள் வழங்கப்படு வதில்லை எனவும் அவர்கள் சிறைச்சாலைக் குள்ளேபாரிய சித்திரவதைகளை எதிர்கொள்வதாகவும் கண்ணீர் மல்க கூறினார்கள். (ச-5)

## அநுராதபுரம்...

குறிப்பிடவில்லை.

இதேவேளை சம்பவம் தொடர்பாக வாரிய பொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். அநுராதபுரம் சிறைச்சாலையில் 32 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை வெலிக்கட சிறைச்சாலையில் தமிழ், சிங்கள கைதிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 5 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)




இலங்கை மின்சாரசபையின் வடமாகாண ஊழியர்களிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இந்நிகழ்வில் இலங்கை மின்சாரசபை வடமாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டு சங்கத்தின் தலைவர் எஸ்.குமாரலிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தம் ஆகியோர் உரையாற்றுவதையும், பிரதேச மின்பொறியியலாளர் எஸ்.ஞானகணேசன், பிரதம விருந்தினர் மற்றும் அவரின் பாரியார் ஆகியோர் அரங்கில் அமர்ந்திருப்பதையும், துடுப்பாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற சுன்னாகம் பிரதேச காரியாலயம், மின்பாவனை சேவை நிலையம் இணைந்த அணியின் தலைவருக்கு வெற்றிக் கேடயத்தினை பிரதமவிருந்தினர் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## ஐ.நா. அதிகாரி ஜோன் ஹோம்...

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதி செயலாளர் ஜோன் ஹோம்ஸ் நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வருகை தந்துள்ளார். நான்கு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்புக்கு வந்த அவர் வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லாகமவை சந்தித்து கலந்துரையாடினார்.

அதன் பின்னர் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் விமானம் மூலம் பலாலியை வந்தடைந்த ஹோம்ஸ் மணற்காட்டுப் பகுதி யில் மீளக்குடியமர்ந்த மக்களைச் சென்று பார்வையிட்டார்.

அங்கிருந்து இராமாவில் நலன்புரி முகாமுக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடிய பின் யாழ் செயலகத்துக்குச் சென்று யாழ். அரச அதிபர் க.கணேஷுடன் நீண்ட நேரம் உரையாடினார். இச் சந்திப்பில் உள்ளக இடம்பெயர்வின் பின் மீள்குடியமர்ந்த மக்கள், வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து அழைத்து வரப்பட்டு மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள், யாழ்ப்பாண நலன்புரி முகாம்களிலி ருந்து மீளக்குடிய மர்த்தப்பட்ட மக்கள் என அனைவருக்கும் தேவையான உதவிகள், இடவசதிகள் தொழில் வாய்ப்பு என்பன குறித்து கலந் துரையாடிய பின் பிற்பகல் கொழும்புக்கு திரும்பினார். இன்று வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்குச் சென்று மீள குடியமர்ந்த மக் களின் நிலைமைகளை நேரில் பார்வையிட வுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரி வித்துள்ளது.

அத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள மக்களின் நிலைமைகள் மீள்குடியேற்ற நடவடிக்கை தொடர்பாக ஜோன் ஹோம்ஸ் ஆராய்வார்.

அதன்பின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளார். இம்முறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஜோன் ஹோம்ஸ் சந்திக்கவுள்ளதாக கூட்டமைப்பு தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை அமைச்சர் மகிந்த சமரசிங்கவை சந்தித்து மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடிவுள்ள ஜோன் ஹோம்ஸ் அமைச்சருடன் இணைந்து ஊடகவியலாளர் மாநாடு ஒன்றையும் கொழும்பில் நடத்தவுள்ளதாக கூறப்படுகின்றது. (ச-5)

## பசில் எம்.பி...

இது தொடர்பில் அவர் நீதி மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவை அழைத்து விசாரணைக்கென்று கைது செய்து அழைத்துச் செல்லும் போது காணாமல் போகும் விடயங்கள் பற்றி கூறியதுடன் இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவில் எடுப்பதாகவும் தன்னிடம் கூறியதாக அரிய நேத்திரன் மேலும் தெரிவித்தார். (எ-1)

## மடு, துணுக்காய் கல்வி வலயங்களின் பணியாளர்கள் கடமைக்குத் திரும்ப பணிப்பு

மடு, துணுக்காய் வலயக்கல்வி அலுவலகங்கள் சொந்த இடங்களில் மீண்டும் இயங்கி வருவதனால் கல்வி, கல்வி சார ஊழியர்களை கடமைக்கு திரும்புமாறு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

மடு, துணுக்காய் வலயக்கல்வி அலுவலகங்கள் சொந்த இடங்களில் மீண்டும் இயங்கி வருகின்றன. எனவே மேற்படி இரு வலயக்கல்வி அலு வலகங்களிலும் கடமையாற்றிய கல்வி, கல்விசார ஊழியர்கள் தமது கடமைகளை பொறுப்பேற்க வேண்டும்.

அத்துடன் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் சொந்த இடத்தில் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் வலயக் கல்வி அலுவலகங்களில் வாகனச் சாரதிகளாக கடமை யாற்றிவர்கள் உடனடியாக கடமைக்குதிரும்ப வேண்டும்.

அதேயோன்று ஏனைய கல்வி, கல்விசார ஊழியர்களும் வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வருகை தந்து உடனடியாக உரிய அலுவலகங்களுக்கு கடமைக்கு செல்ல வேண்டும். முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங் களில் மீள்குடியமர்த்தல் பணிகள் நடைபெற்று வருவதனால் அனைத்து உத்தியோகத்தர்களினதும் பங்களிப்பு மிக முக்கியமானது.

எனவே மனிதாபிமான பணியாக ஏற்று அனைத்து ஊழியர்களும் கடமைக்கு திரும்புமாறு வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (ச-5)

## ஜனாதிபதித் தேர்தல் அறிவித்த...

ஐக்கிய தேசிய முன்னணி, ஜே.வி.பி. என்பன இணங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் பொதுத் தேர்தலில் அவர்கள் தனித்துப் போட்டியிடுவது என இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக புலனாய்வுத்துறையினர் மூலம் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையில் ஜனாதிபதித் தேர்தல் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் எதிர்க் கட்சிகளுக்குள் இருக்கும் ஐக்கியத்தை சிதைப்பதற்காக பொதுத் தேர்தலை அறிவிக்க ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலை தவிர்க்க வாய்ப்புள் ளதாகக் கூறப்படும் அரசாங்க அமைச்சர்கள் பொதுத் தேர்தலில் தமக்காக உச்ச பலத்தை பயன்படுத்துவார்கள் என்பதால் அவர்களுக் குள் உத்வேகம் அதிகரிப்பது ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு சாதகமாக அமையும் என ஜனாதிபதி எண்ணியுள்ளார்.

இந்த விடயங்களை ஆராய்ந்து எதிர்வரும் 18ஆம் திகதியின் பின்னர் உடனடியாக ஜனாதிபதித் தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிட்டு டிசம்பர் கடைசியில் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தல் குறித்த அறிவிப்பை வெளியிட ஜனாதிபதி எண்ணியிருப்பதாகவும் தகவல்களை வழங்கிய அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## வன்னிப் பாடசாலைகளில்...

கடமையாற்றிய ஆசிரியர்களின் நவம்பர் மாத சம்பளம் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தினாலேயே வழங்கப் படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தகவல் தருகையில் முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட 19 பாடசாலைகள் இனங்காணப்பட்டு தற்போது யோகபுரம் மகாவித்தியாலயம், வவுனிக்குளம் படிவம் நான்கு ஆகிய பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

மேற்படி இரு பாடசாலைகளிலும் 692 மாணவர்கள் கல்வி கற்பதுடன் 16 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

எனினும் குறித்த இரு பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. எனவே முல்லைத்தீவு யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் மு/வவுனிக்குளம் படிவும் நான்கு பாடசாலை ஆகியவற்றில் கடமையாற்றி தற்போது யாழ். மாவட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்கள் மனிதாபிமான முறையில் அணுகி உடனடியாக கடமைக்கு திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அத்துடன் மேற்படி இரு பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு நவம்பர் மாத சம்பளம் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தினால் வழங்கப்படும்.

எனவே குறித்த இரு பாடசாலைகளிலும் கடமையாற்றி யாழ். மாவட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்பில் உள்ள ஆசிரியர்கள் கடமையை ஏற்கவரும் போது இறுதியாக சம்பளம் பெற்ற விபரங்களை தற்போதைய வலயக்கல்வி அலுவலகத்தில் இருந்து எடுத்து வர வேண்டும்.

இவ் விடயம் தொடர்பில் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோரை வடக்குமாகாண கல்விப்பணிப் பாளர் வீ.இராசையா கேட்டுள்ளார். (ச-5)


## பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியில் 2000 ஆண்டு முதல் தொண்டர் ஆசிரியராக அரும்பணியாற்றிய

**திரு. வாமதேவன் வினோகாந்தன்**



அவர்கள் 12.11.2009 அன்று உதவி ஆசிரியராக நியமனம் பெற்று தொடர்ந்தும் எமது கல்லூரியில் சேவையாற்ற வந்துள்ளமையையிட்டு யாம் பெரும் மகிழ்ச்சி அடைவதோடு, அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற எல்லாம் வல்ல கற்பக விநாயகன் தாள் பணிந்து வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி
உரும்பிராய்

(C-3737)


## நாடாளுமன்ற அமர்வுக்...

விசேட சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வாரத் திற்கு ஒரு தடவை மட்டும் எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றம் கூடும் என சபாநாயகர் வி.ஜே.மு. லொக்கு பண்டார அறிவித்திருந்தார். நேற்று காலை 9.30 க்கு நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டதும் சபா நாயகர் இந்த அறிவிப்பை விடுத்தார். இதனால் குழப்பமடைந்த எதிர்க்கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்கள், கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் அது குறித்து ஆராயாமல் எப்படி இந்த அறிவிப்பை வெளியிட முடியும் என சபாநாயகரிடம் கேள்வி தொடுத்தனர். அதற்கு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன பதிலளிக்க முற்பட்டபோது இருதரப்பிற் கும் இடையே வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. சபாநாயகர் ஆசனத்திற்கு முன்பாக ஒன்று கூடிய ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தை நிறை வேற்று அதிகாரம் கட்டுப்படுத்துவதாக கூறி சத்தமிட்டனர். (ச-5)


**Computer Personal Classes**

MS Office, PageMaker, Photoshop, CorelDraw, ICT, GIT, Internet & E-mail ஆகியன உங்கள் வசதிக்கேற்ப வீடுகளுக்கு நேரடியாக வந்து கற்பிக்கப்படும். அத்துடன் Hardware Repairing & Servicing செய்து கொடுக்கப்படும்.

T.P.: 0778070662 ,0776158090

(3940)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்

(கற்பூர மணியம்)



கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று *(17.11.2009)* செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக் கப்படும்.

கருங்காலி,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்

(3941)


## அறிவித்தல்

நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களிற்கு இம்முறை எந்தவித கட்டணங்களுமின்றி கீழ்க் குறிப்பிட்ட தொழிற்பயிற்சியளிக்கப்படும்.

- ☆ ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங் — காலம்:-10மாதம்
- ☆ Mobile Phone Repairing — காலம்:-3மாதம்
- ☆ ஏயர் கொண்டிசனிங் — காலம்:-6மாதம்
- ☆ எலக்ரிக்கல் வயறிங் , றீவைண்டிங் — காலம்:-6மாதம்
- ☆ மோட்டார் சைக்கிள் மெக்கானிசம் — காலம்:-6மாதம்
- ☆ Diploma in computer Hard ware Engineering — காலம்:-3மாதம்

பயிற்சிகள் ஆரம்பம் 21.11.2009 சனிக்கிழமை 11 am. விபரங்கள் நேரில்

**JAFFNA TECHNICAL INSTITUTE**

No.45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 0718561654

கிளை: NEW ASIAN CENTER
56/15, ஸ்ரான்லி வீதி, (சம்பத் வங்கியருகாமை) யாழ்ப்பாணம்.
T.P:- 0779254078

(C-3735)



# YOGIS BEAUTY

ஆரம்பம்: 22.11.2009 காலை 11 மணி

பயிற்சிகள் முடிவில் Advanced Cosmetology சான்றிதழ்கள் வழங்கப்படும்

**The Academy in Beauty Therapy, Hair Dressing & Home Science**



அழகுக்கலை வகுப்புகள் பல புதிய திருப்பங்களுடனும் சருமங்களுக்கேற்ற வித்தியாசமான மெசின்களின் உபயோகங்களுடனும் நவீன முறையில் மேல் நிலை மாற்றங்களுடன் அறிமுகமாகின்றது. (Advanced Cosmetology Course) பழைய புதிய மாணவர்கள் இதன் மூலம் அழகுக்கலை அறிவை நவீனப்படுத்திக் கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்

**Mrs.Yogini Shanmuganathan**

*Diploma in Aesthetics & Cosmetology (India)*
*Diploma in Advanced Bridal Make-Up Character Maked-up (India)*
*Diploma in Home Economics (India and Sri Lanka)*

ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும். கேக் ஐசிங் வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக]

T.P.:021 2222796,
021 3210077,
0777164923, 0718788814

(C-3733)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.